بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ　نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ　وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 48

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஜமாதிஸ் ஸானீ 05

ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - நுபுவ்வத் 27 ★ 27 நவம்பர் 2025


## அல்லாஹ்வின் கட்டளை

فَاجۡتَنِبُوا الرِّجۡسَ
مِنَ الۡاَوۡثَانِ وَاجۡتَنِبُوۡا
قَوۡلَ الزُّوۡرِ ۙ

**நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.**

**(அல் - ஹஜ்: 31)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறுதியில் உண்மையே வெற்றி பெறும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்! பொய்யைப் போன்ற தீய விஷயம் வேற எதுவும் இல்லை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

திருக்குர்ஆன் பொய்யையும் ஒரு அசுத்தமானதாகவும், தீயதாகவும் குறிப்பிட்டுள்ளது. உதாரணமாக, திருக்குர்ஆன் கூறுகின்றது:

فَاجۡتَنِبُوا الرِّجۡسَ مِنَ الۡاَوۡثَانِ
وَاجۡتَنِبُوۡا قَوۡلَ الزُّوۡرِ

பாருங்கள்! இங்கு பொய்யை சிலையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. மேலும் உண்மையில் பொய்யும் ஒரு சிலையாகும். இல்லையென்றால் உண்மையை விட்டுவிட்டு மனிதன் ஏன் வேறொன்றின் பக்கம் செல்கின்றான்?. உதாரணமாக, சிலையினுள் எந்த உண்மைத்துவமும் இருப்பதில்லை. அதே போன்று பொய்யில் வெளிப்புற அலங்காரத்தை தவிர வேறெதுவும் இல்லை. பொய் கூறுபவர்கள் மீது எந்த நம்பிக்கையும் இருப்பதில்லை. எந்த அளவிற்கு நம்பிக்கை குறைந்து விடுகின்றது என்றால் ஒருவேளை அவர்கள் உண்மையே பேசினாலும், அப்போதும் கூட இதிலும் ஏதாவது பொய்யின் கலப்படம் இருக்குமோ என்ற எண்ணம் எழுகின்றது.

பொய் கூறுபவர் தம்மிடம் பொய் குறைந்து விட வேண்டும் என்று விரும்பினாலும் கூட அது உடனடியாக விலகுவதில்லை. நீண்ட காலம் வரை தனிமையை மேற்கொண்டால், அப்போதுதான் உண்மை பேசக்கூடிய பழக்கம் அவர்களுக்கு ஏற்படும். (அல்ஹகம் தொகுதி ஆறு பக்கம் 31 ஆகஸ்ட் 31 1902 பக்கம் 2).

இறுதியில் உண்மையே வெற்றி பெறும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். நன்மையும், வெற்றியும் அதனுடைய தாகவே இருக்கும். நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்! பொய்யை போன்ற தீய விஷயம் எதுவுமில்லை. பொதுவாக உண்மை பேசக்கூடியவர் பிடிபட்டு விடுகின்றார் என்று உலகவாதிகள் கூறுகின்றனர். ஆனால் நான் ஏன் அதனை செயல்படுத்த வேண்டும்? என் மீது ஏழு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும் அல்லாஹ்வின் அருளால் எந்த ஒரு வழக்கிலும், ஒரு சொல்லைக் கூட பொய்யாக எழுதுவதற்கு எனக்கு அவசியம் ஏற்படவில்லை. ஏதாவது ஒரு வழக்கிலாவது இறைவன் எனக்கு தோல்வியை வழங்கிவினானா? இப்போது ஒருவர்

இதன் தொடர்ச்சி. 10-ம் பக்கம் ......

## ஏகத்துவத்திற்கு பிறகு மாபெரும் நன்மை என்பது உண்மையை மேற்கொள்ளுதல் ஆகும். மனித நல்லொழுக்கத்தில் இது ஓர் அடிப்படை அம்சமாகும். பொய் இயல்பிற்கு எதிரானதாகும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஃபுர்கான் வசனம் 73-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உண்மை இதுவாகும். அதாவது ஏகத்துவத்திற்கு பிறகு எல்லாவற்றையும் விட மாபெரும் நன்மையும், இந்த உலகில் மனிதன் எதிர் கொள்கின்ற எல்லாவற்றையும் விட மிகவும் கடினமான பணியும் உண்மையை மேற்கொள்ளுதல் ஆகும். ஆயிரக்கணக்கான மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்கள் கருணை காட்டக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள்; நீதம் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களுக்கு சாட்சியளிக்க நேரிடும்போது, மேலும் அதன் விளைவாக தங்களுடைய இருப்பிற்கோ அல்லது தங்களுடைய ஏதாவது ஓர் உறவினர் மற்றும் நண்பருக்கோ பாதிப்பு ஏற்படும் என்பதை அவர்கள் பார்க்கும் போது, அவர்கள் நிச்சயமாக அதில் ஏதாவது மாற்றத்தை செய்து விடுவார்கள்.

இந்த நோய் எந்த அளவிற்கு பரவி விட்டது என்றால் நமது நாட்டில் மக்கள் மிகவும் தைரியத்துடன் சத்தியம் செய்து பொய்யுரைக்கின்றனர். மேலும் அத்துடன் தங்களுடைய பொய்யை ஏன் உண்மை என ஒப்புக்கொள்ளப்படுவதில்லை? என்று அவர்கள் அதிருப்தி கொள்கின்றனர்.

சுருக்கமாக, உண்மை என்பது ஒரு பெரும் முக்கியத்துவம் கொண்ட விஷயமாகும். நபிமார்கள் இதன் மீது மிகவும் அழுத்தம் கொடுத்துள்ளார்கள். மேலும் இது மனித நல்லொழுக்கத்தின் ஓர் அடிப்படை அம்சமாகும். ஆனால் இன்றைய அரசியல் மற்றும் சமுதாய நலனுக்காக பொய்யானது பொய்யென்று கருதப்படுவதில்லை. மாறாக அதனை ஒரு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாக விஷயமாக ஆக்கியுள்ளார்கள் கருதப்படுகின்றது உண்மையில் பொய்யானது

இதன் தொடர்ச்சி. 10-ம் பக்கம் ......

## நபிமொழி

**உண்மை மனிதனை நன்மையின் பக்கம் அழைத்துச் செல்கின்றது. மேலும் நன்மையானது சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்றது**

عَنِ ابۡنِ مَسۡعُوۡدٍ رَضِیَ اللّٰہُ عَنۡہُ عَنِ النَّبِیِّ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ قَالَ : اِنَّ الصِّدۡقَ یَہۡدِیۡ اِلَی الۡبِرِّ وَاِنَّ الۡبِرَّ یَہۡدِیۡ اِلَی الۡجَنَّۃِ وَاِنَّ الرَّجُلَ لَیَصۡدُقُ حَتّٰی یُکۡتَبَ عِنۡدَ اللّٰہِ صِدِّیۡقًا وَاِنَّ الۡکَذِبَ یَہۡدِیۡ اِلَی الۡفُجُوۡرِ وَاِنَّ الۡفُجُوۡرَ یَہۡدِیۡ اِلَی النَّارِ وَاِنَّ الرَّجُلَ لَیَکۡذِبُ حَتّٰی یُکۡتَبَ عِنۡدَ اللّٰہِ کَذَّابًا

ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்மையானது நன்மையின் பக்கம் அழைத்து செல்கின்றது. மேலும் நன்மையானது சொர்க்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்றது. எந்த மனிதன் எப்பொழுதும் உண்மை பேசுவாரோ அவர் அல்லாஹ்வின் பார்வையில் உண்மையாளர் என்று எழுதப்படுகின்றார்.

மேலும் பொய்யானது பாவம் மற்றும் தீமையின் பக்கம் அழைத்து செல்கின்றது மேலும் தீமையும், அசுத்தமும் மனிதனை நரகத்தின் பக்கம் அழைத்துச் செல்கின்றது. மேலும் எந்த நபர் எப்போதும் பொய் பேசுவாரோ அவர் அல்லாஹ்வின் பார்வையில் பொய்யர் என்று எழுதப்படுகின்றார்.

(ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் அதப்)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், 'உங்கள் குடும்பத்தினருக்காகவும் ஏதாவது விட்டு வைத்துள்ளீர்களா? இல்லையா?' என்று கேட்டபோது, அவர்கள், 'குடும்பத்தினருக்காக அல்லாஹ்வையும், அவனது தூதரையும் விட்டு வந்திருக்கிறேன்' என்று பணிவுடன் கூறினார்கள்

ஹுஸூர் (ஸல்) அவர்கள் நிலவரங்களையும், நிகழ்வுகளையும் ஆராய்ந்த பிறகு ரோம் நாட்டினரை எதிர்த்துப் போரிடுவதில் அன்னார் தாமதம் செய்தாலோ, அல்லது அவர்களை முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நுழைய அனுமதித்தாலோ, அதன் இழப்புகள் அதிகமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால், நெருக்கடியும் கடினமான சூழ்நிலைகளும் இருந்தபோதிலும், ரோம் நாட்டினருக்கு முதலில் வருவதற்கான வாய்ப்பு கொடுக்காமல், தாமே அவர்களின் பகுதிக்குச் சென்று, அவர்களுக்கு எதிராக ஒரு தீர்மானிக்கும் போரை நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள்

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் பத்தாயிரம் தீனார்களை வழங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக இந்த துஆவை செய்தார்கள்:
உஸ்மானே! நீர் மறைவாக செய்ததற்கும், நீர் பகிரங்கமாக செய்ததற்கும், கியாமத் நாள் வரை நிகழவிருப்பதற்கும் அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக! இதற்குப் பிறகு அவர் என்ன செய்தாலும் அவருக்கு எந்தக் கவலையும் இருக்கத் தேவையில்லை'.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **17 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் தபூக் போர் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது போலவே, அதன் கூடுதல் சில விவரங்களை இன்று நான் எடுத்துரைக்கிறேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்தத் தபூக் போரின் பின்னணியை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, கஸ்ரஜ கோத்திரத்தைச் சேர்ந்தவனான அபூஆமிர் மதனீ என்பவன் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடன் தொடர்பு வைத்திருந்ததால், வழிபாடு மற்றும் ஜெபம் செய்யும் பழக்கம் உள்ளவனாக இருந்தான். இதன் காரணமாக மக்கள் இவனைத் துறவி என்று அழைத்தனர். ஆனால் மதத்தின் அடிப்படையில், இவன் கிறிஸ்தவனாக இருக்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவை அடைந்த பிறகு இவன் மக்காவை நோக்கி ஓடிப் போய்விட்டான். மக்காவும் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, இப்போது நான் இஸ்லாத்திற்கு எதிராகக் கலவரம் ஏற்படுத்துவதற்கு வேறு ஏதேனும் ஒரு தந்திரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று இவன் யோசித்தான். கடைசியாக, இவன் தனது பெயரையும், தோற்றத்தையும் மாற்றிக் கொண்டு மதீனாவுக்கு அருகில் உள்ள குபா எனும் கிராமத்திற்குச் சென்று தங்க ஆரம்பித்தான். பல ஆண்டுகளாக வெளியே தங்கி இருந்த காரணத்தாலும் வடிவத்திலும், உடையிலும் சில மாற்றங்களைச் செய்து கொண்டதாலும், மதீனத்து மக்கள் பொதுவாக இவனை அடையாளம் காணவில்லை. இவன் யாருடன் உறவு வைத்திருந்தானோ, அந்த நயவஞ்சகர்கள் மட்டுமே இவனை அறிந்திருந்தனர்.

இவன் மதீனாவின் முனாஃபிக்களுடன் சேர்ந்து இந்த ஒரு திட்டத்தை வகுத்தான்: நான் சிரியாவுக்குச் சென்று கிறிஸ்தவ அரசாங்கத்தையும், அரபு கிறிஸ்தவக் கோத்திரங்களையும் தூண்டி விடுகிறேன்; மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க அவர்களைத் தூண்டி விடுகிறேன்; இங்கே நீங்கள் சிரியாவின் படைகள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தப் போவதாகச் செய்தி பரப்பத் தொடங்கி விடுங்கள்.

அதாவது, மதீனாவில் இருக்கும் நயவஞ்சகர்கள் இந்தச் செய்தியைப் பரப்பத் தொடங்க வேண்டும்.

ஒருவேளை எனது திட்டம் வெற்றியடைந்தால், அப்போது இந்த இரு படைகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு, இவர்களுக்கு இடையே போர் மூளும்.

ஒருவேளை எனது திட்டம் வெற்றியடையாவிட்டால், இந்த வதந்திகளின் காரணமாக முஸ்லிம்கள் தாமே சிரியா மீது சென்று தாக்குதல் நடத்துவார்கள். இதன் மூலம் சீசரின் அரசாங்கத்திற்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் சண்டை மூண்டு, நமது வேலை கைகூடிவிடும். இந்த இரண்டு சூழ்நிலைகளிலும் நமக்குத்தான் நன்மை என்று இந்த குழப்பவாதி கூறினான்.

எனவே, இந்தத் தூண்டுதலைச் செய்துவிட்டு இவன் சிரியாவை நோக்கிச் சென்றான். மதீனாவில் இருந்த முனாஃபிக்கீன் (நயவஞ்சகர்கள்) தினமும் இந்தச் செய்தியைப் பரப்ப ஆரம்பித்தனர்: இன்ன வர்த்தகக் குழுவை நாங்கள் சந்தித்தோம். சிரியாவின் படைகள் மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர் என்று கூறுவர்.

அடுத்த நாளும், 'வேறொரு வர்த்தகக் குழுவை நாங்கள் சந்தித்தோம். சிரியாவின் படைகள் மதீனா மீது படையெடுத்து வரவிருப்பதாக அவர்கள் கூறினார்கள்' என்று கூறி விடுவர். இந்தச் செய்திகள் மிகவும் தீவிரமாகப் பரவத் துவங்கியதினால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே ஒரு இஸ்லாமியப் படையை எடுத்துக்கொண்டு, சிரியாவின் படைகளை எதிர்த்துப் போரிடச் செல்ல வேண்டும் என்பதைப் பொருத்தமானதாகக் கருதினார்கள். இந்த நேரமானது முஸ்லிம்களுக்கு மிகவும் வேதனையான நேரமாக இருந்தது. அது பஞ்சம் நிலவிய ஆண்டாக இருந்தது. கடந்த பருவத்தில் உணவு தானியங்களும், பழங்களும் குறைவாகவே விளைந்திருந்தன. இந்த பருவத்திற்கான தானியங்களும் இன்னும் விளைந்து அறுவடை செய்யப்படவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தப் போர்த்திட்டத்துக்காக புறப்பட்டபோது, செப்டம்பர் மாதத்தின் இறுதியாகவோ அல்லது அக்டோபரின் தொடக்கமாகவோ இருந்தது.

நயவஞ்சகர்களுக்கோ இது அனைத்தும் சதி என்று தெரியும். ஒருவேளை

சிரியா படை தாக்குதல் நடத்த வரவில்லை என்றால், முஸ்லிம்கள் தாமே சிரியா நாட்டினருடன் சண்டையிட்டு அழிந்துபோக வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இந்தத் தந்திரத்தைச் செய்தார்கள். மூத்தா போரின் நிலவரங்கள் அவர்கள் கண்முன்னே இருந்தன. அந்த நேரத்தில் முஸ்லிம்கள் மிகப் பெரியதொரு படையைச் சந்திக்க நேர்ந்தது. அதில் அவர்கள் பெரும் இழப்புகளைச் சந்தித்ததுடன், மிகவும் சிரமப்பட்டே தப்பிப் பிழைத்தார்கள். இப்போது அவர்கள் தங்கள் கண்களால் இன்னொரு மூத்தாப் போரை பார்க்க விரும்பினார்கள். அதில் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் ஷஹீதாகி விடுவார்கள் என்று அவர்கள் எண்ணினார்கள். அதனால்தான், ஒருபுறம் நயவஞ்சகர்கள் தினமும் இந்தச் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள்: ‘எதிரிகள் தாக்குதல் நடத்த வரவிருக்கிறார்கள் என்று எங்களுக்கு இன்ன வழியில் தெரியவந்துள்ளது, சிரியாவின் படைகள் வந்து கொண்டிருக்கின்றன என்று எங்களுக்கு இன்ன வழியில் தெரியவந்துள்ளது. மறுபுறம், அவர்கள் மக்களை இப்படி அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள்: ‘இவ்வளவு பெரிய படையை எதிர்த்து நிற்பது எளிதானதல்ல. நீங்கள் போருக்குச் செல்லக்கூடாது. இந்த செயல்களின் மூலம் அவர்களின் நோக்கம் இதுவாக இருந்தது. அதாவது, முஸ்லிம்கள் சிரியா மீது தாக்குதல் நடத்தச் செல்ல வேண்டும், ஆனால், முடிந்தவரை மிகக் குறைந்த எண்ணிக்கையில் செல்ல வேண்டும், அதனால் அவர்களின் தோல்வி அதிகபட்சம் உறுதியாகிவிடும்.

( தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 359 - 360)

குறைந்த எண்ணிக்கையில் இருந்தால் தோல்வி உறுதியாகிவிடும்.

எப்படியிருந்தாலும், வந்த செய்திகளின் அடிப்படையில், ஹுஸூர் (ஸல்) அவர்கள் நிலவரங்களையும், நிகழ்வுகளையும் ஆராய்ந்த பிறகு ரோம் நாட்டினரை எதிர்த்துப் போரிடுவதில் அன்னார் தாமதம் செய்தாலோ, அல்லது அவர்களை முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நுழைய அனுமதித்தாலோ, அதன் இழப்புகள் அதிகமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால், நெருக்கடியும் கடினமான சூழ்நிலைகளும் இருந்தபோதிலும், ரோம் நாட்டினருக்கு முதலில் வருவதற்கான வாய்ப்பு கொடுக்காமல், தாமே அவர்களின் பகுதிக்குச் சென்று, அவர்களுக்கு எதிராக ஒரு தீர்மானிக்கும் போரை நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

( முஹம்மது அபூ ஸுஃரா அவர்களின் நூல், காத்தமுன் நபியீன், தொகுதி 3, பக்கம் 951 - 952, தாருல் ஃபிக்ருல் அரபி, 2012-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதனை ஓர் இடத்தில் இந்த வகையில் எடுத்துக் கூறியுள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த வதந்திகள் கிடைத்தபோது, ரோம் நாட்டினர் நம் மீது படையெடுத்து வந்து தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக, நாமே எல்லைக்குச் சென்று அவர்களைத் தடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு ஆயத்தமாவதற்குக் கட்டளையிட்டார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 22, பக்கம் 135, குத்பா ஜூமுஆ மார்ச் 14, 1941)

நான் முதலில் ஒரு வரலாற்று நூலிலிருந்து ஒரு குறிப்பைக் கொடுத்தேன். இந்தக் குறிப்பிட்ட பகுதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடையது.

எப்படியிருந்தாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொதுவாகப் போர் நடவடிக்கைகளை ஓரளவுக்கு இரகசியமாக வைத்திருப்பார்கள்.ஆனால் ஃஹைபரின் போர் நடவடிக்கைக்குப் பிறகு தபூக்கின் போர் நடவடிக்கை எப்படி இருந்தது என்றால்,அதில் மாநபி (ஸல்) அவர்கள் பொது அறிவிப்பு செய்தார்கள். வழியில் உள்ள சிரமங்களையும் எதிரிகளின் எண்ணிக்கையின் பெருக்கத்தையும் முன்பே அறிவித்து, ஆயத்தமாவதற்கு அறிவுறுத்தினார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் ஜிஹாத் வ அஸ்ஸீர், தொகுதி 5, பக்கம் 303, ஹதீஸ் எண்: 2948)

இந்த அறிவிப்பு புஹாரீயில் வருகிறது.

அத்துடன், பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கா மற்றும் ஏனைய அரபிக் கோத்திரங்களுக்கு அந்த மக்கள் படையில் சேர்வதற்காக, ஆட்களை அனுப்பி வைத்தார்கள். மற்றொரு பக்கம், செல்வந்தர்கள் அல்லாஹ்வின் வழியில் தங்கள் செல்வத்தைச் செலவிட வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வலியுறுத்தினார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 183, தபூக் போர், தாருல் குதுபில் இல்மியா, 2002-ம் ஆண்டு பதிப்பு)

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல கோத்திரங்களுக்குப் போரில் பங்குபெறுமாறு செய்தி அனுப்பி, அவர்கள் பக்கம் தம் தூதுவர்களை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் புரைதா பின் உஸைத் (ரலி) அவர்களை பனூ இஸ்லாம் கோத்திரத்தின் பக்கம், ஹஸ்ரத் அபூ ரஹ்ம் ஃகிஃபாரீ (ரலி) அவர்களை அவர்களின் பனூ ஃகிஃபார் கோத்திரத்தின் பக்கம், ஹஸ்ரத் அபூ வாகித் லைஸீ (ரலி) அவர்களை அவர்களின் லைஸ் கோத்திரத்தின் பக்கம், ஹஸ்ரத் அபூ ஜஃத் ஸூம்ரீ (ரலி) அவர்களை அவர்களின் கோத்திரத்தின் பக்கம் அனுப்பினார்கள். ஹஸ்ரத் ராஃபி பின் மிக்யஸ் (ரலி) அவர்களை ஜுஹைனாவின் பக்கம் அனுப்பினார்கள். அதேபோன்று, ஹஸ்ரத் நுஜம் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களை அஸ்ஜஃ கோத்திரத்தின் பக்கம், புதைல் பின் வர்கா (ரலி), அம்ரு பின் ஸாலிம் (ரலி) மற்றும் புஸ்ர் பின் ஸுஃப்யான் (ரலி) ஆகியோரை பனூ கஃப் மற்றும் பனூ அம்ரு ஆகிய கோத்திரங்களின் பக்கம், அதேபோன்று அப்பாஸ் பின் மிர்தாஸ் (ரலி) அவர்களை பனூ ஸுலைமின் பக்கம் அனுப்பி வைத்தார்கள்.




(இம்தாஉல் அஸ்மாஃ, தொகுதி 2, பக்கம் 47, தபூக் போர், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1999-ம் ஆண்டு)

அந்த நேரத்தில் மதீனாவில் ஒரு கடுமையான அச்சம் மற்றும் திகில் சூழ்ந்திருந்தது. அதற்குக் காரணம், ஒரு ஆற்றல்வாய்ந்த எதிரி எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்பதுதான்.

புஹாரீயின் ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு ஃகஸ்ஸானீ அரசன் நம்முடன் போரிடுவதற்காகத் தன்னுடைய குதிரைகளுக்கு லாடங்கள் கூட கட்டிவிட்டான், அதாவது முழுமையான ஆயத்தம் செய்துவிட்டான் என்று நாங்கள் எங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தோம். புஹாரீயின் மற்றோர் அறிவிப்பிலேயே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நாங்கள் ஒரு ஃகஸ்ஸானீ அரசனுக்கு அஞ்சியிருந்தோம். அவன் எங்கள் மீது தாக்குதல் நடத்த ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறான் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. இந்த சூழலில், எங்கள் நெஞ்சங்கள் அச்சத்தால் நிறைந்திருந்தன.

(ஸஹீஹ் புஹாரீ, ஹதீஸ் எண்: 2468, ஹதீஸ் எண்: 4913)

எப்படியிருந்தாலும், இதைப் பொருட்படுத்தாமல், ஸஹாபிகளின் ஆயத்தமும், ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய பொருள் தியாகத்திற்கான காட்சியும் காணக் கிடைத்தது.

இதன் விவரங்களில் எழுதப்பட்டுள்ளது: இந்த அச்சம் மற்றும் திகிலுடன் சேர்த்து, அந்த நேரத்தில் மதீனா ஒரு கடுமையான பஞ்சத்தை எதிர்கொண்டிருந்தது.பயிர்களும், பழங்களும் அறுவடைக்குத் தயாராக இருந்தன. இந்தப் பஞ்சத்தில், மக்கள் தங்கள் பயிர்களை அறுவடை செய்யும் கவலையிலும், ஆயத்தத்திலும் இருந்தபோதுதான் ஜிஹாதுக்குப் புறப்படுவதற்கான அறிவிப்பு வந்து விட்டது.

பின்னர், கடும் கோடைக்காலம், நூற்றுக்கணக்கான மைல் தொலைவுப் பயணம், அத்துடன் வழிக்கான உணவுப்

பொருட்களின் பற்றாக்குறை இருந்தது. இத்தனை பிரச்சினைகள் இருந்தபோதிலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து ஜிஹாதுக்குச் செல்ல அறிவிக்கப்பட்டபோது, உண்மை மற்றும் நன்றியுணர்வின் மொத்த உருவமாக இருந்த உயிர்த்தியாகம் செய்யத் துணிந்தவர்கள், தயாரான தங்கள் பயிர்களையும், பழுத்திருந்த பழங்களையும் விட்டுவிட்டு, பயணத்திற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினார்கள். இவ்வளவு நீண்ட பயணத்திற்குத் தயாராவது, அந்த கலப்பற்ற, ஆனால் ஏழையான நபித்தோழர்களுக்கு ஒன்றும் எளிதான செயலாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் இந்தக் கடினமான தருணங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். எனவே, மாநபி (ஸல்) அவர்கள் பொருள் தியாகத்திற்கான பொதுவான அறிவிப்பை செய்த வண்ணம், செல்வந்தர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிட வேண்டும் என்றும், பயண விலங்குகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் திட்டம் அறிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: مَنْ جَهَّزَ جَيْشَ الْعُسْرَةِ فَلَهُ الْجَنَّةُ

அதாவது, جيشِ عُسرت எனும் தபூக் போருக்காக எவர் ஒருவர் பொருட்களை வழங்குவாரோ, அவருக்கு சுவனம் கிடைக்கும்.

(ஸஹீஹ் புஹாரீ,கிதாபுல் வஸாயா, ஹதீஸ் எண்: 2778)

இந்த சந்தர்ப்பத்தில், எல்லாருக்கும் முதலாக செல்வத்தைக் கொண்டு வந்தவர் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள்தான். அவர்கள் தம் வீட்டின் அனைத்துச் சொத்துக்களையும் கொண்டு வந்தார்கள். அதன் மதிப்பு நான்கு ஆயிரம் திர்ஹம் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், 'உங்கள் குடும்பத்தினருக்காகவும் ஏதாவது விட்டு வைத்துள்ளீர்களா? இல்லையா?' என்று கேட்டபோது, அவர்கள், 'குடும்பத்தினருக்காக அல்லாஹ்வையும், அவனது தூதரையும் விட்டு வந்திருக்கிறேன்' என்று பணிவுடன் கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது நிகழ்வை விவரிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸதக்கா செய்யுமாறு எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அந்த நேரத்தில் என்னிடம் செல்வம் இருந்தது. நான் 'எப்போதாவது இவர்களை முந்த முடியுமானால், இன்று நான் அபூபக்ரை முந்தி விடுவேன் என்று (மனதில்) கூறினேன். (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்) கூறுகிறார்கள்:

நான் எனது பாதிச் சொத்தைக் கொண்டு வந்தேன். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உங்கள் குடும்பத்தினருக்காக என்ன விட்டு வந்துள்ளீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு நான், 'எவ்வளவு கொண்டு வந்திருக்கிறேனோ, அவ்வளவே குடும்த்தனிருக்காக விட்டு வந்திருக்கிறேன்' என்று பணிவுடன் கூறினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்மிடம் இருந்த அனைத்தையும் கொண்டு வந்தார்கள். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள், 'அபூபக்ரே! நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்காக என்ன வைத்து விட்டு வந்துள்ளீர்கள்?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் முன்னிலையிலேயே கேட்டதாக (உமர் (ரலி) அவர்கள்) கூறுகிறார்கள்.

அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், 'நான் அவர்களுக்காக அல்லாஹ்வையும், அவனது தூதர் (ஸல்) அவர்களையும் விட்டு விட்டு வந்துள்ளேன்' என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த ஒரு விஷயத்திலும் நான் அவர்களை ஒருபோதும் முந்த முடியாது' என்று நான் கூறினேன்.

( ஸுனன் திர்மிதி, அப்வாவுல் மனாகிப், ஹதீஸ் எண்: 3675)

இந்த நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் தம் சொற்களில் இவ்வாறு விவரித்துள்ளார்கள்:

ஒரு ஜிஹாதின் சந்தர்ப்பம் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விவரிக்கிறார்கள்:

எனக்குத் தோன்றியது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எப்போதும் என்னை முந்தி விடுகிறார்கள்; இன்று நான் அவர்களை முந்துவேன். இதை நினைத்து நான் வீட்டிற்குச் சென்று, எனது சொத்திலிருந்து பாதிப் பொருளை எடுத்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பிப்பதற்கு எடுத்து வந்தேன். அது இஸ்லாத்திற்கு மிகவும் கடுமையான இன்னல்கள் நிறைந்த காலக்கட்டமாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம்முடைய அனைத்துச் சொத்துக்களையும் எடுத்து வந்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சமர்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அபூபக்ரே! வீட்டில் என்ன விட்டு வந்துள்ளீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'அல்லாஹ்வையும், அவனது தூதர் (ஸல்) அவர்களையும்' என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'இதைக் கேட்டதும் நான் மிகவும் வெட்கம் அடைந்தேன். இன்று நான் எனது முழு வலுவையும் பயன்படுத்தி அபூபக்ரை முந்த விரும்பினேன், ஆனால் இன்றும் அபூபக்ர் என்னை முந்தி விட்டார்கள் என்று புரிந்தேன்'.

(ஃபஸாயிலுல் குர்ஆன்(3) அன்வாருல் உலூம், தொகுதி 11, பக்கம் 577)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பொருள் தியாகம் குறித்து ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் ஹப்பாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் இருந்தேன். அப்போது அன்னார் 'உஸ்ரா' எனும் படை குறித்து (தியாகத்துக்கான) திட்டம் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நூறு ஒட்டகங்கள் அவற்றின் சேணம் மற்றும் பல்லக்குடன் அல்லாஹ்வின் வழியில் வழங்குவதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று பணிவுடன் கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் (மீண்டும்) படை குறித்து (தியாகத்துக்காக) அறிவித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் மீண்டும் எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இருநூறு ஒட்டகங்கள் அவற்றின் சேணம் மற்றும் பல்லக்குடன் அல்லாஹ்வின் வழியில் வழங்குவது எனது பொறுப்பு என்று பணிவுடன் கூறினார்கள். பிறகு, இந்தக் கூற்றைக் கேட்ட பிறகும் பெருமானார் (ஸல்) அவர்கள் (மீண்டும்) படை குறித்து (தியாகத்துக்காக) அறிவித்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! முந்நூறு ஒட்டகங்கள் அவற்றின் சேணம் மற்றும் பல்லக்குடன் அல்லாஹ்வின் வழியில் வழங்க நான் பொறுப்பேற்கின்றேன் என்று பணிவுடன் கூறினார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்தேன். அன்னார் (ஸல்) சொற்பொழிவு மேடையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி கொண்டிருந்தார்கள்:

مَا عَلٰى عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ  مَا عَلٰى عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ

இதற்குப் பிறகு உஸ்மான் என்ன செய்தாலும், அதற்காக அவர் பிடிக்கப்படமாட்டார். இதற்குப் பிறகு உஸ்மான் என்ன செய்தாலும், அதற்காக அவர் பிடிக்கப்படமாட்டார்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் ஸமுரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உஸ்ரா படைக்கான ஆயத்தத்துக்கு உதவியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்தில் ஓராயிரம் தீனார்களை சமர்ப்பித்தார்கள். அதை பெருமானார் (ஸல்)

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அவர்களின் மடியில் போட்டு விட்டார்கள். ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்தேன். அன்னார் (ஸல்) அந்தத் தீனார்களை தம் மடியில் எடுத்து வைத்து எண்ணிக் கொண்டிருந்தீர்கள். மேலும், இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்:

مَا ضَرَّ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ الْيَوْمِ

இந்த நாளுக்குப் பிறகு உஸ்மான் என்ன செய்தாலும், அவருக்கு எந்த தீங்கும் ஏற்படாது'. இதனை அன்னார் இரு முறை கூறினார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் பத்தாயிரம் தீனார்களை வழங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக இந்த துஆவை செய்தார்கள்:

غَفَرَ اللّٰهُ لَكَ يَا عُثْمَانُ مَا اَسْرَرْتَ وَمَا اَعْلَنْتَ وَمَا هُوَ كَائِنٌ اِلٰى يَوْمِ الْقِيَامَةِ مَا يُبَالِىْ مَا عَمِلَ بَعْدَهَا

அதாவது, உஸ்மானே! நீர் மறைவாக செய்ததற்கும், நீர் பகிரங்கமாக செய்ததற்கும், கியாமத் நாள் வரை நிகழவிருப்பதற்கும் அல்லாஹ் உம்மை மன்னித்தருள்வானாக! இதற்குப் பிறகு அவர் என்ன செய்தாலும் அவருக்கு எந்தக் கவலையும் இருக்கத் தேவையில்லை'.

ஓர் அறிவிப்பின்படி, அவர்கள் இந்த போரின் ஆயத்தத்திற்காக ஆயிரம் ஒட்டகங்களையும், எழுபது குதிரைகளையும் சமர்ப்பித்தார்கள். ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக இந்த துஆவை செய்தார்கள்: اَللّٰهُمَّ ارْضَ عَنْ عُثْمَانَ فَاِنِّىْ عَنْهُ رَاضٍ

அதாவது, அல்லாஹ்வே! நீ உஸ்மானிடம் திருப்தியடைவாயாக! ஏனெனில், நானும் அவரிடம் திருப்தியடைகிறேன்'.

இப்னு இஸ்ஹாக் (ரலி) அவர்கள் விவரிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தபூக் போரின்போது, வேறு எந்த ஸஹாபியும் செலவிட முடியாத அளவிற்குப் பெரிய தொகையைச் செலவிட்டார்கள்.

( ஸுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப் அன் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹதீஸ் எண்: 3700, 3701)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஒரு வணிகக் குழு சிரியா நாட்டிலிருந்து அதிக லாபத்துடன் திரும்பியபோது, அவர்கள் படையின் மூன்றில் ஒரு பகுதிக்கான அனைத்துச் செலவுகளையும் தம் பொறுப்பில் எடுத்துக்கொண்டார்கள். படையின் மூன்றில் ஒரு பகுதிக்கான செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட, படைக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள். ஒவ்வொரு படை வீரருக்கும் ஒரு காலணி வார் கூட, அதாவது, மிகச் சிறிய பொருளும் கூடத் தம் பணத்திலிருந்து செலவிடப்பட வேண்டும் என்பதற்கான ஏற்பாட்டை அவர்கள் செய்தார்கள். இதற்கு அவர்களுக்குப் பத்தாயிரம் தீனார்கள் செலவானது. இது ஒட்டகங்களும் குதிரைகளும் போக (கூடுதலாக) இருந்தது. இது மட்டுமின்றி, ஆயிரம் ஒட்டகங்கள், நூறு குதிரைகள் மற்றும் பிற பொருட்களுடன் சேர்த்து, ஆயிரம் தீனார்களையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்தில் சமர்ப்பித்தார்கள். படையினரின் ஆயத்தத்துக்காக அவர்கள் செலவிட்ட அந்தப் பத்தாயிரம் தீனார் அல்லாமல் (கூடுதலாக) இந்த ஆயிரம் தீனார்கள் இருந்தன. இந்தத் தருணத்தில் ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் நூறு ஊக்கியா வெள்ளியை சமர்ப்பித்தார்கள். சில அறிவிப்புகளின்படி, இருநூறு ஊக்கியா வெள்ளியைச் சமர்ப்பித்தார்கள். இந்த ஊக்கியா என்பதும் ஓர் எடை அளவாகும். இது பத்தரை தோலாவுக்குச் சமமானது. அதாவது, 1050 முதல் 2100 தோலா அளவு வரை வெள்ளி. அல்லது இன்றைய காலகட்டத்தில் பார்த்தால், ஒன்றே கால் கிலோ அல்லது இரண்டரை கிலோ வெள்ளி ஆகும்.

பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உஸ்மான் பின் அஃஃபானும், அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃபும், அல்லாஹ்வின் திருப்திக்காகச் செலவிடுபவர்கள் ஆவர். அவர்கள் நிறைய செல்வத்தை வழங்கியுள்ளார்கள். அவர்கள் பூமியில் அல்லாஹ்வின் கருவூலங்களில் (இரு) கருவூலங்கள் ஆவர்'. ஒரு அறிவிப்பில் உள்ளது, ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் நானூறு ஊக்கியா தங்கத்தைச் சமர்ப்பித்தார்கள். அதாவது 4200 தோலா தங்கம். சிலர் தொள்ளாயிரம் ஒட்டகங்களைச் சமர்ப்பித்ததாகவும் எடுத்துரைத்துள்ளார்கள். எப்படியிருந்தாலும், அதிகமான தியாகங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்து, 'என்னிடம் எட்டாயிரம் திர்ஹம்கள் உள்ளன; நான் நாலாயிரம் திர்ஹம்களைக் வீட்டாருக்காக வைத்துக் கொண்டேன்; நாலாயிரம் தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்' என்று பணிவுடன் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு பரக்கத்திற்கான துஆ செய்தவாறு கூறினார்கள்: بَارَكَ اللّٰهُ فِيْمَا اَمْسَكْتَ وَفِيْمَا اَعْطَيْتَ

அதாவது, 'நீர் குடும்பத்தாருக்காக வைத்துக் கொண்ட செல்வம் மற்றும் அல்லாஹ்வின் வழியில் வழங்கிய செல்வம் ஆகிய அனைத்திலும் அல்லாஹ் பரக்கத்தை வழங்குவானாக!'.

ஹஸ்ரத் ஆஸிம் பின் அதீ (ரலி) அவர்கள் எழுபது வஸக் பேரீச்சம் பழங்களைச் சமர்ப்பித்தார்கள். ஒரு வஸக் என்பது அறுபது ஸாஃ அளவு ஆகும். ஒரு ஸாஃ என்பது சுமார் மூன்று சேர் அளவு ஆகும். அதாவது, மொத்தம் ஏறத்தாழ 12,600 கிலோ பேரீச்சம் பழங்கள் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்கு செல்வம் கொண்டு வந்தவர்களில், அதிக தியாகங்கள் செய்தவர்களில், ஹஸ்ரத் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) ஆகியோரின் பெயர்களும் உள்ளன.

(ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ அலல் மவாஹிபுல் லித் துன்யா,தொகுதி 4, பக்கம் 69, தாருல் குதுபில் இல்மியா, 1996-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு காலம் இருந்தது, மக்கள் தங்கள் உயிர்களை ஆடு மாடுகளைப் போல இறை மார்க்கத்திற்காகத் தியாகம் செய்தார்கள். செல்வங்களைப் பற்றி என்ன சொல்ல? ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை தமது முழு வீட்டின் உடமைகளையும் தியாகம் செய்தார்கள். ஓர் ஊசியைக் கூட தமது வீட்டில் விட்டு வைக்கவில்லை. அதேபோல், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது தகுதி மற்றும் மனமுவந்து அளித்ததன்படி மற்றும் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது ஆற்றல் மற்றும் தகுதிக்கு ஏற்ப, இதேபோல் தத்தமது தகுதிகளுக்கு ஏற்ப அனைவரும் செய்தார்கள். அனைத்து ஸஹாபாவும் தம்முடைய உயிர்கள் மற்றும் செல்வங்கள் உட்பட இந்த இறை மார்க்கத்திற்காக தியாகம் செய்யத் தயாராகிவிட்டார்கள். பின்னர் அன்னார் கூறினார்கள்:- அல்லாஹ் கூறுகிறான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

நீங்கள் உங்களுக்கு மிகவும் விருப்பமான பொருட்களை மேன்மை பொருந்திய அல்லாஹ்வின் வழியில் செலவிடாத வரை, நீங்கள் நன்மையைப் பெற முடியாது. (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 192, அடிக்குறிப்பு, 2022-ம் ஆண்டு பதிப்பு)

கூடுதல் நன்மைகளை பெறுவதற்காக ஸஹாபா பெருமக்கள் செலவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

ஸஹாபா சில நேரங்களில் தமது வீட்டின் பொருட்களையும், உடமைகளையும் விற்று போருக்கான செலவுகளை ஈடு செய்தார்கள். சில நேரங்களில் அவர்கள் தங்கள் சொத்துக்களை விற்று, மற்றவர்களுக்காகச் செலவிட்டார்கள்; போருக்குச் செல்பவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் வழங்கினார்கள் என்பது தென்படுகிறது.

எனவே, ஒரு முறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்து, நமது படை இன்ன

பயணத்திற்காகச் செல்லவிருக்கிறது. ஆனால் முஃமின்களிடம் எந்தப் பொருளும் இல்லை. உங்களில் யாராவது நற்கூலி சம்பாதிக்க இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள்.

இதைக் கேட்டதுமே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுந்து, தமது சேமிப்பை எடுத்து, அந்தப் பணத்தை முஸ்லிம்களின் செலவுகளுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைப் பார்த்தபோது, உஸ்மான் சுவனத்தை விலைக்கு வாங்கிவிட்டார் என்று கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத்,தொகுதி 19, பக்கம் 98-99)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் பொருள் தியாகங்கள் பற்றி குறிப்பிடுகையில் தமது ஒரு பேருரையில் இந்த நிகழ்வை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில் போருக்குத் தயாராவதற்கு நிறைய செல்வம் தேவைப்பட்டது. அந்த நாள்களில் சிறிது நிதி நெருக்கடியும் இருந்தது. உலகம் இப்படியே உள்ளது. சிலவேளை செழிப்பான நாள்கள் இருக்கும், சிலவேளை கடினமான நாள்கள் இருக்கும். இந்த சந்தர்ப்பத்திலும் நெருக்கடியான நாள்கள் இருந்தன. போருக்கான தேவையும் இருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு முன்னால் உண்மையான தேவையை எடுத்துரைத்து, பொருள் தியாகத்தைச் சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அதன் விளைவாக, ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களோ தமது அனைத்துச் செல்வத்தையும் கொண்டு வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது பாதிச் செல்வத்தைக் கொண்டு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், 'நான் பத்தாயிரம் ஸஹாபிகளின் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்வதற்கான எனது இந்த அர்ப்பணிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள். அதுபோக, அன்னார் ஆயிரம் ஒட்டகங்களையும், எழுபது குதிரைகளையும் வழங்கினார்கள். அதேபோல், அனைத்து கலப்பற்ற ஸஹாபா பெருமக்களும் தத்தமது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ப பொருள் தியாகங்களைச் சமர்ப்பித்தார்கள். அல்லாஹ் அதன் சிறந்த முடிவுகளை வெளிப்படுத்தினான்.

(குத்பாத்தே நாஸிர், தொகுதி 2, பக்கம் 341,குத்பா ஜுமுஆ,அக்டோபர் 18- 1968)

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பொருள் தியாகங்களின் முக்கியத்துவம் என்ன? என்பதை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்கள் புரிந்திருக்கிறார்கள். இது அல்லாஹ்வின் மிகப் பெரிய அருள் ஆகும். நான் ஏராளமான நிகழ்வுகளை எடுத்துரைக்கிறேன். சிலர் உண்மையில் தங்களிடம் உள்ள அனைத்தையும் தியாகம் செய்கிறார்கள். செல்வந்தர்களும், வசதி படைத்தவர்களும் கூட ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரின் முன்மாதிரிகளை முன்வைத்து, தங்கள் தியாகங்களின் தரத்தை அதிகரிக்க வேண்டும். ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் மற்ற தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ்வின் அருளால், உயர்த்தரத்திலான தியாகங்களைச் செய்யும் பல செல்வந்தர்கள் இருக்கிறார்கள். பலவீனமானவர்களும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக முன்னேறி வர வேண்டும். இந்தக் காலத்தில் அவர்களுக்கும் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஸஹாபா பெருமக்கள் முடிந்தவரை ஏதோவொன்றைச் சமர்ப்பித்தார்கள். ஏழை மற்றும் பலவீனமான வீரர்களுக்குப் பயண விலங்குகள், வாள்கள் மற்றும் பிற போர்க்கருவிகளை வழங்கினார்கள். சில ஏழை ஸஹாபிகள் மற்றும் பெண் ஸஹாபிகள் ஒன்று அல்லது இரண்டு முத் அளவுள்ள தானியத்தைச் சமர்ப்பித்தபோது, 'அந்தோ! நம்மிடம் இன்னும் அதிகமாக இருந்திருந்தால், அதையும் சமர்ப்பித்திருக்கலாமே! என்று அவர்களின் உள்ளங்கள் ஏங்கின. ஆனால், நயவஞ்சகர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்து, இந்த ஒரு கைப்பிடி தானியங்களால் இந்த மக்கள் சீசரை தோற்கடிக்கப் போகிறார்கள் என்று கூறினார்கள்.

முத் என்பதோ ஒரு கைப்பிடி அல்லது சில கைப்பிடிகளுக்குச் சமமான ஒரு சிறிய அளவே ஆகும். நயவஞ்சகர்களின் இந்தக் கேலியைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

اَلَّذِيۡنَ يَلۡمِزُوۡنَ الۡمُطَّوِّعِيۡنَ مِنَ الۡمُؤۡمِنِيۡنَ فِى الصَّدَقٰتِ
وَالَّذِيۡنَ لَا يَجِدُوۡنَ اِلَّا جُهۡدَهُمۡ فَيَسۡخَرُوۡنَ مِنۡهُمۡ
سَخِرَ اللّٰهُ مِنۡهُمۡ وَلَهُمۡ عَذَابٌ اَلِيۡمٌ

நம்பிக்கை கொண்டவர்களுள் மகிழ்ச்சியுடன் தாராளமாகத் தருமம் வழங்குபவர்களைப் பற்றியும், தங்களின் (கடின) உழைப்பால் பெறுவதைத் தவிர (வேறு) எதனையும் வழங்க இயலாதவர்கள் பற்றியும் குற்றங்குறை கூறுபவர்கள் (நயவஞ்சகர்களாகிய) இவர்களேயாவர். எனவே அ(வ்வாறு தியாகம் செய்ப)வர்களை (நயவஞ்சகர்களாகிய) இவர்கள் ஏளனம் செய்கின்றனர். அல்லாஹ் அவர்களின் ஏளனத்திற்குத் தண்டனை வழங்குவான். மேலும் அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை உண்டு.(அத்தவ்பா: 79)

கடினமாக உழைத்து பொருள் தியாகம் செய்தவர்களில் ஹஸ்ரத் அபூ அக்கீல் (ரலி) அவர்களும் ஒருவர். அவர்கள் இரவு முழுவதும் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து, இரண்டு ஸாஃ பேரீச்சம் பழங்களைப் பெற்றார்கள். ஒரு ஸாஃ என்பது கிட்டத்தட்ட இரண்டரை கிலோ ஆகும். அதாவது, மொத்தம் ஐந்து கிலோ பேரீச்சம் பழங்களைப் பெற்றார்கள். அதில் இருந்து ஒரு ஸாஃ அளவு உள்ளதை வீட்டினருக்காக வைத்துக்கொண்டு, ஒரு ஸாஃ அளவுள்ள பேரீச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு கொண்டு வந்து விட்டார்கள். இது அவர்களால் செய்யமுடிந்த தியாகம் ஆகும்

(அஸதுல் காபா, தொகுதி 6, பக்கம் 215,அபூ அகீல், தாருல் குதுபில் இல்மியா, 2003-ம் ஆண்டு)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓர் இடத்தில் எடுத்துக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு முறை சந்தா வழங்குமாறு அறிவித்தார்கள். அப்போது ஒரு ஸஹாபி சென்று சிறிது கூலி வேலை செய்தார்கள். யாருடைய கிணற்றிலோ சென்று தண்ணீர் இறைத்தார்கள் போலும்! அதற்குப் பதிலாக அவர்களுக்கு அரை சேர் அல்லது முக்கால் பாவு அளவு தானியம் கிடைத்தது. அதை அவர்கள் கொண்டு வந்து சந்தாவில் போட்டுவிட்டார்கள்.

அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய் தேவைப்பட்டது. இப்படித்தான் சண்டைக்கான ஆயத்தம் நடக்கிறது! என்று நயவஞ்சகர்கள் நகைத்தவாறு கூறினார்கள். இது தபூக் போரின் நிகழ்வு. இது ரோம் நாட்டினருடனான எதிர்கொள்ளுதலாக இருந்தது. இன்று பிரித்தானிய அரசாங்கம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் அந்த நேரத்தில் ரோமானிய அரசாங்கம் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்த போது, அந்த நேரத்தில் ஆங்கிலேயர்கள் இந்த உலகில் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அவ்வளவு பெரிய அரசாங்கத்துடன் போரிடுவதற்கு அந்த ஸஹாபி ஒரு சில கைப்பிடி கோதுமையைக் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

நயவஞ்சகர்கள் இதைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இது தெரிந்தபோது, இறைவனின் பார்வையில் இந்த கோதுமையின் மதிப்பு என்னவென்று அவர்களுக்கு என்ன தெரியும்? என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இந்த கோதுமைகள் மூலம்தான் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. ரோம் நாட்டினர் தோற்கடிக்கப்பட்டார்கள். ரோம் நாட்டினர் மட்டுமல்ல, ரோமானிய அரசாங்கத்திற்கு நிகரான ஈரானியர்களையும் முஸ்லிம்கள் தோற்கடித்தனர்.

(குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 17, பக்கம் 46-47)

ஒரு ஸஹாபியின் ஒரு விநோதமான நிகழ்வு பற்றிய குறிப்பும் உள்ளது. இந்தப் போரின் ஆயத்தத்துக்காக, கலப்பற்ற சஹாபா ஏதாவது ஒரு வடிவில் பயணத்துக்கான

ஆயத்தத்திலும், இந்தப் பொருள் தியாகத் திட்டத்திலும் கலந்து கொள்ளத் தங்களால் ஆன முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்று ஏற்கனவே கூறப்பட்டது. செல்வந்த ஸஹாபிகள் தங்கள் செல்வத்தையும், உடைமைகளையும் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள். ஏழை மற்றும் உதவியற்ற ஸஹாபிகள் கடினமாக உழைத்து கூலி வேலை செய்து, கிடைத்த சிறிய கூலியையே சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலைகளில், ஒரு ஸஹாபி ஹஸ்ரத் உல்பஃ பின் ஸைத் (ரலி) அவர்களின் குறிப்புக் காணப்படுகிறது. அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, மற்ற அனைவரையும் விடக் கலப்பற்ற மற்றும் தனித்துவம் வாய்ந்த ஒரு குற்றமற்ற பாணியை மேற்கொண்டார்கள். அவர்களும் ஏழையாகவும், கலப்பற்றவராகவும் இருந்தார்கள். சமர்ப்பிப்பதற்கு அவர்களிடம் எதுவும் இல்லை. ஜிஹாதில் பங்குபெறக்கூடிய ஆற்றலும் அவர்களிடம் இருக்கவில்லை. எனவே, அவர்கள் ஓர் இரவில் தொழுகைக்காக நின்றார்கள். அழுது புலம்பி இவ்வாறு வேண்டினார்கள்:

. அல்லாஹ்வே! நீ ஜிஹாது செய்யக் கட்டளையிட்டுள்ளாய்! அதை வலியுறுத்தியுள்ளாய்; ஆனால், என்னிடம் எதுவும் இல்லை. உன் தூதர் (ஸல்) அவர்களிடமும் கூட, நான் சென்று போரிட, எனக்கு வழங்கக்கூடிய அளவுக்குப் போர்க் கருவிகள் இல்லை. உன் நபியோ பொருள் தியாகத்திற்காக ஒரு திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அதில் என்னால் பங்குபெறவும் முடியாது. எனினும், எனது உயிர், செல்வம் மற்றும் கண்ணியத்தின் மீது நிகழும் ஒவ்வோர் அநீதியையும், வரம்புமீறலையும் மன்னித்து, அதையே முஸ்லிம்களுக்காக ஸதக்காவாக வழங்குகிறேன்.

பொழுது புலர்ந்தபோது, இவர்கள் மற்ற ஸஹாபிகளுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு சென்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், இன்று இரவு தன் கண்ணியத்தை ஸதக்கா செய்தவர் எங்கே? என்று வினவினார்கள். யாரும் எழுந்து நிற்கவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் வினவினார்கள். ஆனால் யாரும் எழுந்து நிற்கவில்லை. இறுதியாக, ஹஸ்ரத் உல்பஃ (ரலி) அவர்கள் எழுந்து, அன்னாரிடம் அனைத்து விஷயங்களையும் கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَبْشِرْ فَوَالَّذِيْ نَفْسِيْ بِيَدِهٖ لَقَدْ كُتِبَتْ فِي الزَّكٰوةِ الْمُتَقَبَّلَةِ

அதாவது, 'மகிழ்ச்சி அடைவீராக! என் உயிர் எவன் கையில் இருக்கிறதோ, அவன் மீது ஆணையாக! எவர்களின் ஸதக்கா ஏற்றுக்கொள்ளப்பட்டதோ, அந்த மக்களில் நீர் எழுதப்பட்டுவிட்டீர்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி கஸீர், பாகம் 4, பக்கம் 9, தபூக் போர் குறிப்பு, தாருல் மஃரூஃபா,பெய்ரூத் பதிப்பு 1976-ம் ஆண்டு)

என்ன ஓர் அழகான, தனித்துவமான கலப்பற்ற தன்மை மற்றும் தியாக மனப்பான்மை! அல்லாஹ் உள்ளங்களின் நிலையை அறிபவன். அனைத்துச் சூழ்நிலைகளையும் அறிந்தவன். அவனும் இவர்களின் இந்த மனப்பான்மையை ஏற்றுக்கொண்டான். இதன் தகவலையும் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பெண்களும் பின்தங்கியிருக்கவில்லை. அவர்கள் இந்தப் போரின் ஆயத்தத்துக்காகத் தங்கள் நகைகளை முன்வைத்து விட்டார்கள். அதைப் பற்றி ஹஸ்ரத் உம்மு ஸினான் அஸ்லமியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்பாக, ஒரு துணி விரிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அதில் வாசனை திரவியங்கள், கைப்பட்டைகள், வளையல்கள், காதணிகள், மோதிரங்கள் மற்றும் சிலம்புகள் ஆகியவையும் இருந்தன. இவை அனைத்தையும் பெண்கள் முஸ்லிம்களின் போர் ஆயத்தத்துக்காக வழங்கினார்கள்.

(கிதாபுல் மகாஸீ,தொகுதி 2, பக்கம் 380-381,தபூக் போர், தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2013ம் ஆண்டு)

எப்படியிருந்தாலும், ஒருபுறமோ கலப்பற்றவர்களும், நம்பிக்கை கொண்டவர்களும் இப்படிப்பட்ட நிலையில் இருந்தார்கள். மறுபுறம், இந்தச் சந்தர்ப்பத்தில் நயவஞ்சகர்களும் தங்கள் முழு வலுவையும் பயன்படுத்தினார்கள். ஒரு கோணத்தில் இது நயவஞ்சகர்களின் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கடைசித் தந்திரமும் சதியும் ஆகும்.நயவஞ்சகர்களுக்குத் தங்கள் வெற்றியில் முழு நம்பிக்கை இருந்தது.

முஸ்லிம்கள் சிரியாவை நோக்கி இந்த நீண்ட பயணத்தை மேற்கொண்டே தீருவார்கள் என்ற உறுதியில் அவர்கள் நிலைத்திருந்தார்கள். மேலும், நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வர மாட்டார்கள் என்ற ஷைத்தானிய நம்பிக்கையிலும் அவர்கள் இருந்தார்கள். எனவே, முஸ்லிம்கள் குறைந்தபட்ச எண்ணிக்கையிலேயே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் வெளியேற வேண்டும் என்பது இப்போது அவர்களின் முழு முயற்சியாக இருந்தது.

அவர்களின் சிந்தனைப்படி, படையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை எவ்வளவு குறைவாக ஆகி விடுமோ, அந்தப் படை அவ்வளவே சிறியதாக இருக்கும். அந்தப் படையின் தோல்வியும், மரணமும் உறுதியாகி விடும். எனவே, அவர்கள் தற்போதைய சூழ்நிலைகளின் நெருக்கடி மற்றும் பயணத்தின் துன்பங்களையும், சிரமங்களையும் மிகைப்படுத்திக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் முஸ்லிம்களை அச்சுறுத்தத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காகப் பல்வேறு காரணங்களைக் கூறி, அவர்களைத் தூண்டிக் கொண்டே இருந்தார்கள். உதாரணமாக, இவ்வளவு கடுமையான வெப்பம் நிலவுகிறது. பயணம் மிகவும் நீளமானது. பயணத்திற்கான வழிவகைகள் மிகவும் குறைவாக உள்ளன என்று கூறினார்கள்.

மதீனாவின் மக்கள் தொகையின் பெரும்பாலான பகுதி விவசாயத் தொழில் செய்பவர்களாக இருந்ததால், அவர்களின் பயிர்கள் அறுவடைக்குத் தயாராக இருந்தன. இந்தப் பயிர்கள் பஞ்சம் நிலவிய காலத்தில் தயாராகிக் கொண்டிருந்தன. பிறகு, அவர்கள் மதீனாவில் ஆங்காங்கே முஸ்லிம்களிடம் இந்த விஷயங்களைப் பேசினார்கள்: 'இப்போது நீங்கள் சந்திக்கப் போகும் படை எவ்வளவு கடுமையானதும், போர் குணம் கொண்டதுமாக இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது. அவர்களுடன் போர் செய்வது எளிதான செயல் ஒன்றும் அல்ல. நாங்களோ உங்கள் அனைவரையும் எப்படிப் பார்க்கிறோம் என்றால், ஒன்று நீங்கள் கொல்லப்படுவீர்கள் அல்லது நீங்கள் அனைவரும் அவர்களுடைய கைதிகளாகி விடுவீர்கள்'. இவ்வாறு நயவஞ்சகர்கள் சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நயவஞ்சகர்களின் இந்தப் பிரச்சாரம், உயர்ந்த தரத்தில் இருந்த மற்றும் கலப்பற்ற நம்பிக்கை கொண்டவர்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், பலவீனமான ஈமான் கொண்ட சிலரின் உள்ளங்கள் மிகவும் அதிகமாகப் பயந்து விட்டன. அதனால், அவர்கள் போருக்குச் செல்லாமல் இருக்க பல்வேறு காரணங்களையும், சாக்குப்போக்குகளையும் முன்வைக்கத் தொடங்கினார்கள்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thalkkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

இருப்பினும், இத்தகைய சாக்குப்போக்குகளைச் சொல்பவர்களில் பெரும்பான்மையினர் நயவஞ்சகர்களே ஆவர்.

நயவஞ்சகர்களின் இந்தப் பிரச்சாரத்தையும், சாக்குப்போக்குகளுடன் அவர்கள் பின்வாங்கியதையும் திருக்குர்ஆன் இந்த வகையில் எடுத்துக் கூறுகிறது:

فَرِحَ الْمُخَلَّفُوْنَ بِمَقْعَدِهِمْ خِلٰفَ رَسُوْلِ اللّٰهِ
وَكَرِهُوْٓا اَنْ يُّجَاهِدُوْا بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ
وَقَالُوْا لَا تَنْفِرُوْا فِي الْحَرِّ ط قُلْ نَارُ جَهَنَّمَ اَشَدُّ حَرًّا ط
لَوْ كَانُوْا يَفْقَهُوْنَ فَلْيَضْحَكُوْا قَلِيْلًا وَّلْيَبْكُوْا كَثِيْرًا ۚ
جَزَآءًۢ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ

(போருக்குச் செல்லாமல்) பின்தங்கி விட்ட (நயவஞ்சகர்களாகிய அ)வர்கள் அல்லாஹ்வின் தூதரு(டைய கட்டளை)க்கு எதிராக (செயல்பட்டு) தமது இடத்திலேயே அமர்ந்திருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றனர். அவர்கள் தங்கள் செல்வங்களையும் தங்கள் உயிர்களையுங்கொண்டு அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்வதை வெறுத்தனர். (ஒருவர் மற்றொருவரிடம்) இவ்வளவு கடும் வெயிலில் (போர் செய்வதற்கு ஒன்று திரண்டு) வெளியேறாதீர்கள் எனக் கூறினர். நீர் (அவர்களிடம்) நரக நெருப்பு (இந்த வெயிலை விடவும்) மிகக் கடினமானதாகும் என்று கூறுவீராக. அந்தோ! அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமே! எனவே அவர்கள் (ஏமாற்றியதற்காகக்) குறைவாகச் சிரிக்க வேண்டும். அவர்கள் சம்பாதித்துக் கொண்டதற்கு பிரதிபலனாக அதிகமாக அழ வேண்டும். (அத்தவ்பா: 81- 82)

அறிவிப்புகளின்படி, இந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்கு வந்து, ஜிஹாதுக்குச் செல்லாமல் இருப்பதற்காக ஏதேனும் ஒரு சாக்குப்போக்கைக் கூறி, நாங்கள் ஜிஹாதுக்குச் செல்லாமல் இருக்க அனுமதி வழங்குங்கள் எனக் கேட்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அனுமதி அளித்து விடுவார்கள். எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறாகப் பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறி, ஜிஹாதுக்குச் செல்லாமல் இருக்க அனுமதி பெற்றார்கள். இவர்கள் அப்துல்லாஹ் பின் உபை போன்றவர்களுடன் இருந்த முனாஃபிக்களைத் தவிர மற்றவர்கள் ஆவர். அல்லாஹ் நயவஞ்சகர்களின் இந்த எல்லா சாக்குப்போக்குகளையும் அம்பலப்படுத்தியவாறு திருக்குர்ஆனில் தெளிவுபடுத்தி கூறியிருந்தான்:

அதாவது அவர்கள் பின்வாங்கியது அவர்களின் ஈமானின் பலவீனத்தினாலேயே ஆகும். மேலும், அவர்கள் தங்கள் சாக்குப்போக்குகளில் பொய்யர்கள் ஆவர் என்று திருக்குர்ஆனில் வெளிப்படையாகவே கூறி விட்டான். திருக்குர்ஆனில் அவர்களைப் பற்றி வசனங்கள் இறங்கியபோது, எதிர்காலத்திற்காகவும், இமாம் தரப்பிலிருந்து ஏதாவது ஒரு திட்டம் அல்லது குரல் மேலோங்கும் போது, எவ்வாறு செவிசாய்க்க வேண்டும் என்று அனைவரும் எச்சரிக்கப்பட்டனர். முன்னேறிச் செல்ல வேண்டும். எப்படியானாலும் சரி, அதில் கலந்துகொள்வதற்குத் தங்களால் முடிந்த அளவு ஆயத்தம் செய்ய வேண்டும். எனவே, மேன்மை பொருந்திய அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

لَوْ كَانَ عَرَضًا قَرِيْبًا وَّسَفَرًا قَاصِدًا لَّاتَّبَعُوْكَ
وَلٰكِنْۢ بَعُدَتْ عَلَيْهِمُ الشُّقَّةُ ط وَسَيَحْلِفُوْنَ بِاللّٰهِ
لَوِ اسْتَطَعْنَا لَخَرَجْنَا مَعَكُمْ ۚ يُهْلِكُوْنَ اَنْفُسَهُمْ ۚ
وَاللّٰهُ يَعْلَمُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ عَفَا اللّٰهُ عَنْكَ ۚ
لِمَ اَذِنْتَ لَهُمْ حَتّٰى يَتَبَيَّنَ لَكَ الَّذِيْنَ صَدَقُوْا
وَتَعْلَمَ الْكٰذِبِيْنَ لَا يَسْتَاْذِنُكَ الَّذِيْنَ
يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ اَنْ يُّجَاهِدُوْا
بِاَمْوَالِهِمْ وَاَنْفُسِهِمْ ط وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالْمُتَّقِيْنَ
اِنَّمَا يَسْتَاْذِنُكَ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ
وَارْتَابَتْ قُلُوْبُهُمْ فَهُمْ فِيْ رَيْبِهِمْ يَتَرَدَّدُوْنَ
وَلَوْ اَرَادُوا الْخُرُوْجَ لَاَعَدُّوْا لَهٗ عُدَّةً
وَّلٰكِنْ كَرِهَ اللّٰهُ انْۢبِعَاثَهُمْ
فَثَبَّطَهُمْ وَقِيْلَ اقْعُدُوْا مَعَ الْقٰعِدِيْنَ
لَوْ خَرَجُوْا فِيْكُمْ مَّا زَادُوْكُمْ اِلَّا خَبَالًا
وَّلَاَاوْضَعُوْا خِلٰلَكُمْ يَبْغُوْنَكُمُ الْفِتْنَةَ ۚ
وَفِيْكُمْ سَمّٰعُوْنَ لَهُمْ ط وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالظّٰلِمِيْنَ
لَقَدِ ابْتَغَوُا الْفِتْنَةَ مِنْ قَبْلُ وَقَلَّبُوْا لَكَ الْاُمُوْرَ
حَتّٰى جَآءَ الْحَقُّ وَظَهَرَ اَمْرُ اللّٰهِ وَهُمْ كٰرِهُوْنَ

பொருள்: விரைவில் கிடைக்கக்கூடிய பயனாகவோ, அல்லது சிறிய பயணமாகவோ இருந்திருப்பின் அவர்கள் நிச்சயமாக உம்மைப் பின்பற்றியிருப்பர். ஆனால் நீண்ட தூரப் பயணமாக இருக்குமென்று அவர்களுக்குத் தோன்றியது. (இப்பொழுது நீர் திரும்பியதன் பின்னர்) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து, எங்களால் முடிந்திருப்பின், கட்டாயம் நாங்கள் உங்களுடன் புறப்பட்டிருப்போம் என்று கூறுவார்கள். அவர்கள் தங்களையே அழிவிற்குள்ளாக்கிக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் பொய்யர்கள் என்பதனை அல்லாஹ் அறிகின்றான்.

அல்லாஹ் உம்முடைய தவறி(ன் தீய விளைவி)னை நீக்கி விட்டு, உமக்குக் கண்ணியத்தை வழங்கினான். உண்மையுரைப்பவர்கள் (யார் என்று) உமக்குத் தெரிந்து பொய்யுரைப்பவர்களை நீர் அறியாத வரையில் அ(னுமதி கோரிய)வர்களுக்கு நீர் ஏன் பின்தங்கி விட அனுமதி வழங்கினீர்? அல்லாஹ்விடத்தும், மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொள்பவர்கள் தங்கள் பொருள்களையும் தங்கள் உயிர்களையும் கொண்டு அறப்போர் செய்வதிலிருந்து விலகிக் கொள்ள உம்மிடம் அனுமதி கோர மாட்டார்கள். அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நன்கு அறிபவனாவான்.

அல்லாஹ்விடத்தும், மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொள்ளாதவர்களும், தங்கள் உள்ளங்களில் சந்தேகங்களைக் கொண்டிருப்பவர்களும் மட்டுமே பின்தங்கி விடுவதற்கு (உம்மிடம்) அனுமதி கோருவர். எனவே அவர்கள் தங்களின் சந்தேகங்களின் காரணமாக இங்கு மங்குமாகத் தடுமாறுகின்றனர். மேலும் அவர்கள் (போருக்குப்) புறப்படுவதற்கு உறுதியான நாட்டம் கொண்டிருப்பார்களாயின், நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள். ஆனால் (இந்த உயர்வான நோக்கத்திற்காக) அவர்கள் புறப்படுவதனை அல்லாஹ் விரும்பவேயில்லை. எனவே தங்கள் இடத்திலேயே அவர்களை அவன் உட்கார வைத்து விட்டான். உட்கார்ந்து கொண்டேயிருப்பவர்களுடன் நீங்களும் உட்கார்ந்து கொண்டேயிருங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது. அவர்கள் உங்களுடன் இணைந்து (போருக்குப்) புறப்பட்டிருப்பார்களாயின், தீமையைத் தவிர உங்களுக்குச் சிறிதும் உதவி செய்திருக்க மாட்டார்கள். அவர்கள் உங்களுக்கிடையே (குழப்பத்தை உருவாக்குவதற்காக) சுற்றித் திரிந்திருப்பார்கள். உங்களுக்குள் குழப்பத்தை உருவாக்க விரும்புகின்றனர். அவர்களுக்(குக் கூறுவதற்)காக (செய்திகளை) உன்னிப்பாகக் கேட்பவர்கள் சிலரும் உங்களுள் இருக்கின்றனர். மேலும் அநீதி இழைப்பவர்களை அல்லாஹ் நன்கு அறிகின்றான். அவர்கள் இதற்கு முன்னரும் குழப்பத்தை உருவாக்க நாடியிருந்தனர். அவர்கள் உமக்கு முன்னால் விவகாரங்களை மாற்றி, மாற்றி முன் வைத்தனர். இறுதியில் உண்மை வந்து விட்டது. அவர்கள் முற்றிலும் வெறுப்போராக இருந்தும் அல்லாஹ்வின் தீர்ப்பு வெளியாயிற்று. (அத்தவ்பா: 42 - 48)

எனவே, நயவஞ்சகர்களின் நிலையை அல்லாஹ் இதில் வெளிப்படையாகவே எடுத்துக் கூறி விட்டான். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறினான்:

'நீர் அவர்களின் பொய்ச் சாக்குப்போக்கைக் ஏற்றுக்கொண்டீர். நீர் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்திருந்தால், அனுமதி அளித்திருக்காமல் இருந்திருந்தால், அவர்களின் நயவஞ்சகத்தின் இரகசியம் அனைவருக்கும் வெளிப்பட்டிருக்கும். நிச்சயமாக அம்பலமாகியிருக்கும்.

போருக்கு அவர்கள் அப்போதும் சென்றிருக்க மாட்டார்கள். இருப்பினும், அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்கள் செல்லாமல் இருந்ததுதான் சிறந்தது. ஏனெனில், ஏதாவது ஒரு காரணத்தினால் அவர்கள் சென்றிருந்தாலும், போரின்போது முஸ்லிம்களுக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடிய செயல்களைச் செய்திருப்பார்கள். எப்படியிருந்தாலும், இந்த முனாஃபிக்களின் விருப்பத்தின்படி முடிவுகள் வெளிப்படவில்லை.

(ஸீரத் என்ஸைக்லோபீடியா, தொகுதி 9, பக்கம் 461 - 462

இதன் மீதமுள்ள விளக்கத்தையும், அடுத்து எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்!

கடந்த குத்பாவில், ரப்வாவில் உள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதலைப் பற்றி நான் குறிப்பிட்டேன். காயமடைந்திருக்கும் அஹ்மதி காதிம்களுக்காக துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் அனைவருக்கும் முழுமையான உடல் நலத்தை வழங்குவானாக! அல்லாஹ் அவர்களை அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் பாதுகாப்பானாக! இத்தகைய விபத்துகளின் விளைவுகள் சில வேளை பின்னரும் வெளிப்படுவதுண்டு. இந்த நேரத்தில், மூன்று 'காதிம்கள் அதிகமாகக் காயமடைந்துள்ளனர். இதனால், அவர்கள் இப்பொழுது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற ஐந்து பேர் சிகிச்சை அளிக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், அவர்களுக்கான சிகிச்சையிலும் காயங்கள் ஆறுவதற்கு நேரம் எடுக்கும். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் முழுமையான குணமளிப்பானாக! எதிர்காலத்தில், அனைத்துத் தீமைகளிலிருந்தும், எல்லா இழப்புகளிலிருந்தும், ஜமாஅத் மக்களை எல்லா இடத்திலும் பாதுகாப்பானாக!

தொழுகைக்குப் பிறகு, ஒரு ஜனாஸா காயிப் தொழவைப்பேன். இவர்கள் மதிப்பிற்குரிய சாம் அலீ நைனா சாஹிப் ஆவார்கள். இவர்கள் மார்ஷல் தீவுகளைச் சேர்ந்தவர். கடந்த நாள்களில், அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில், 83 வயதில் இவர்கள் வஃபாத் ஆனார்கள்.

انا للہ وانا الیہ راجعون

நம்முடைய இயக்கத்தின் முரப்பி, ஹாஃபிஸ் ஜிப்ரீல் ஸயீத் சாஹிப் அவர்களின் தப்லீஃகின் விளைவால் 1980 களில் இவர்களுக்கு இஸ்லாத்துடனான முதல் அறிமுகம் ஏற்பட்டது. அப்பொழுது இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. இருப்பினும், மிகுந்த உறுதியுடன் தம் ஈமானில் உறுதியாக நின்றார்கள். இஸ்லாம் சட்டவிரோதமான, பயங்கரவாதத்துடன் தொடர்புடைய மார்க்கம் ஆகும் என்று ஒரு செனட்டர் பாராளுமன்றத்தில் கூறியபோது, இவர்கள் மிகவும் துணிச்சலுடன் உள்ளூர் பத்திரிகையில், 'அஹ்மதிகளான நாங்கள் முஸ்லிம்கள் ஆவோம்; எங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று செய்தி கொடுத்தார்கள்.

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இவர்களின் இந்தத் துணிச்சலான அறிக்கை ஜமாஅத்திற்கு வலுசேர்த்தது. அந்த மனிதரோ சட்டம் நிறைவேற்ற முயற்சித்தார். இருப்பினும், இவர்களின் முயற்சிகளால் அது நடக்க முடியவில்லை. இவர்கள் உள்ளூர் சமூகத்தில் ஒரு செல்வாக்கு மிக்க நபராக அறியப்பட்டார்கள்.

அமெரிக்காவின் துணை அமீர் ஃபலாஹுத்தீன் ஷம்ஸ் சாஹிப் கூறுகிறார்கள்:

எனக்கு ஐந்து ஆண்டுகள் மார்ஷல் தீவுகளில் பணியாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்தத் தீவு அமெரிக்காவின் பொறுப்பில் இருந்ததால், நான் அங்கே போய்க்கொண்டிருந்தேன். சாம் சாஹிப், ஹாஃபிஸ் ஜிப்ரீல் சாஹிப் மூலம் அஹ்மதியாகி இருந்தார்கள். துவக்கத்தில் நான்கு அல்லது ஐந்து குடும்பங்கள் அஹ்மதிகளாக இருந்தன. ஜமாஅத் மிகவும் சிறியதாகவும், பதிவும் செய்யப்படாததாகவும் இருந்தது.

எப்படியிருந்தாலும், ஹாஃபிஸ் ஸாஹிப் மற்றும் இவர்களின் பெரும் முயற்சியால் ஜமாஅத் அங்கே பதிவு செய்யப்பட்டது. ஹாஃபிஸ் சாஹிப் திரும்பி வந்த பிறகு, நீண்ட காலமாக அங்கே எந்த 'முரப்பியும்' இருக்கவில்லை. இதன் காரணமாக, சாம் ஸாஹிப் தாமே, தாம் வஃபாத் ஆகும் வரை, தமது ஜமாஅத்தைக் கவனித்துக் கொண்டார்கள். இவர்கள் தப்லீகும் செய்துகொண்டே இருந்தார்கள். ஜமாஅத்தின் பெயர் ஒருபோதும் மங்காதவாறு பார்த்துக் கொண்டார்கள். மிகுந்த உற்சாகத்துடன் ஜமாஅத் ரீதியிலான ஒத்துழைப்பு அளிப்பார்கள். இங்கிருந்து, மர்கஸிலிருந்து எப்பொழுது பிரதிநிதிக் குழு அங்கே சென்றாலும், அவர்களுக்கு உதவி செய்வார்கள். இவர்கள் எப்போதும் முன்னால் வந்து பணி செய்தார்கள். அதுவும், பயனுள்ள பணியைச் செய்தார்கள்.

மார்ஷல் தீவுகளில் ஜமாஅத்தை நிறுவியதில் இவர்கள் முதன்மை இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். பெரும்பாலான புதிதாக பைஅத் செய்தவர்கள் இவர்களின் முயற்சிகளின் விளைவாக அஹ்மதி முஸ்லிம்களாக ஆனார்கள். இவர்கள் மார்ஷல் தீவுகளின் ஜமாஅத் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். பின்னர், ஷம்ஸ் ஸாஹிப் கூறுகிறார்கள்:

கோஸ்ராயே பகுதியில் பிரச்சார நிலையத்தை நிறுவ நான் சென்றபோது, அங்கும் சாம் சாஹிப் உதவினார்கள். இவர்களின் சில நண்பர்கள் அதில் இணைந்து கொண்டார்கள். அங்கே அல்லாஹ்வின் அருளால் மிஷன் ஹவுஸ் வாங்கப்பட்டது. அங்கே கட்டடமும் கட்டப்பட்டது. கரீபாதீயிலும் இதேபோல், இவர்களின் மூலமாக பிரச்சார நிலையத்தை நிறுவ உதவி கிடைத்தது. இன்னுமொரு இடத்திலும் இவர்களின் மூலமாக பிரச்சார நிலையத்தை நிறுவ உதவி கிடைத்தது.

ஷம்ஸ் ஸாஹிப் கூறுகிறார்கள்: நான் ஒருமுறை சாம் சாஹிபிடம், 'தங்களுக்கு மூன்று தீவுகளில் ஜமாஅத்தை நிறுவுவதற்கும், முக்கியப் பங்கு வகிப்பதற்கும் கிடைத்த இந்த நல்வாய்ப்பிற்கான காரணம் என்ன? தங்களுடைய எந்த நன்மையினால் இது கிடைத்தது?' என்று கேட்டேன். அதற்கு இவர்கள் மிகுந்த பணிவுடன், 'இது எல்லாம் அல்லாஹ்வின் பேரருளே. இதில் என்னுடைய சிறப்பான செயல் எதுவும் இல்லை' என்று பதில் அளித்தார்கள்.

மார்ஷல் தீவுகளின் ஜமாஅத் முரப்பி காஸிம் சௌத்ரி ஸாஹிப் கூறுகிறார்கள்: இவர்கள் தடைகள் இருந்தபோதிலும் தம் ஈமானில் உறுதியாக நின்றார்கள். தம் துணைவியாருடன் சேர்ந்து தியாகங்களைச் செய்தார்கள்.

இவர்களின் துணைவியாரின் தியாகத்தால் ஒரு நிலம் வக்ஃப் செய்யப்பட்டது. இவர்களின் துணைவியார் தமது நிலப் பகுதியை வழங்கினார்கள். அதில்தான் இன்று மார்ஷல் தீவுகளில் முதல் பள்ளிவாசலும் நிறுவப்பட்டுள்ளது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிகழ்வு, இவர்களின் சொந்த வார்த்தைகளில் பின்வருமாறு உள்ளது: இவர்கள் கூறுகிறார்கள்: 1987 ஆம் ஆண்டில், நானும் என் மனைவி மேரியும் லாங் தீவில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தோம். ஒருநாள் காலையில், நாங்கள் எங்கள் அறையிலிருந்து வெளியே பார்த்தபோது, ஓர் உயரமான ஆப்பிரிக்கரைப் பார்த்தோம். நான் ஸலாம் கூறினேன். அவரும் ஸலாம் சொன்னார். அறிமுகம் செய்தபோது, அவர் ஹாஃபிஸ் ஜிப்ரீல் ஸயீத் ஸாஹிப் என்பதும், அவர் மைக்ரோனேஷியாவின் முதல் முபல்லிஃக் என்பதும் தெரியவந்தது. எப்படியிருந்தாலும், சந்திப்புகள் தொடர்ந்து நடைபெற்றன, தொடர்புகள் அதிகரித்தன. ஜிப்ரீல் சாஹிப் இவர்களுக்கு இஸ்லாத்தைப் பிரசாரம் செய்தார்கள். பைபிளில் இருந்து வசனங்களைக் காட்டினார்கள். மேலும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஒரு நபி வரவிருப்பதாக பைபிளில் நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்கள். 'இது ஒரே ஒரு வசனம் மட்டுமல்ல, பல வசனங்கள் உள்ளன' என்று எனக்கு வியப்பாக இருந்தது. 'அதுமட்டுமல்லாமல், புதிய ஏற்பாட்டில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களே சுயமாகக் கூறுகிறார்கள்:

நான் செல்ல வேண்டும், அவர் எனக்குப் பிறகு ஒருவரை அனுப்புவார். (யோவான் 16:7)

இவர்கள் கூறுகிறார்கள்: 'இவை நான் இதற்கு முன் ஒருபோதும் கேட்டிராத உண்மைகள் ஆகும். மேலும், ஹாஃபிஸ் சாஹிப் எனக்கு மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். ஒவ்வொரு விஷயத்தையும் பைபிளிலிருந்தே சொன்னார்கள். இறுதியாக, அல்லாஹ் எனக்கு நேர்வழி வழங்கினான். நான் உண்மைகளைப் பார்த்தபோது, என் உள்ளம் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்.

இவர்கள் கூறுகிறார்கள்: 'நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதும், அதே நேரத்தில் மக்களுக்குத் தெரிந்தவுடன், அரசு அதிகாரிகள், 'நாங்கள் மார்ஷல் தீவுகளில் ஒருபோதும் இஸ்லாம் பரவ அனுமதிக்க மாட்டோம்' என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் ஹாஃபிஸ் ஸாஹிபுடன் தொலைபேசியில் பேசினேன். அவர்கள் அப்போது அங்கிருந்து சென்றிருந்தார்கள். அப்பொழுது அவர்கள், நீங்கள் கவலைப்படாதீர்கள்! அல்லாஹ் வழிகளைத் திறப்பான்' என்று கூறினார்கள். பின்னர், அல்லாஹ் எப்படி வழிகளைத் திறந்தான் என்றால், ஒரு நாள் நான் வீட்டில் அமர்ந்திருந்தபோது, அட்டர்னி ஜெனரலின் அலுவலகத்திலிருந்து ஒருவர் வந்து, என்னிடம், 'ஜமாஅத் நிறுவுதலுக்கான உங்கள் பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது' என்று கூறினார். அங்கே பெரிய ஆட்கள் தடுக்க நினைத்தது எங்கே! ஆனால், அல்லாஹ் பதிவின் ஒப்புதலுக்கான ஏற்பாட்டையும் தானே செய்து. அது வீட்டிற்கே வந்து சேர்ந்து விட்டது எங்கே! இவர்கள் கூறுகிறார்கள்: நான் உடனடியாக அந்தப் பிரதியை ஹாஃபிஸ் ஸாஹிப்பிற்கு அனுப்பி விட்டேன். பிறகு, இவர்கள் கூறுகிறார்கள்: 'எப்படியிருந்தாலும், காலம் செல்லச் செல்ல, அஹ்மதிய்யத் மற்ற முஸ்லிம்களை விடத் தனித்துவமானது என்று நான் புரிந்துகொண்டேன். மேலும், இதில் எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. நான் அஹ்மதி முஸ்லிம் என்ற ஒரு குரல் எப்போதும் என் உள்ளத்தில் எழும். அது எனக்குப் பெருமையாக இருக்கும். இவர்கள் கூறுகிறார்கள்: இருபது ஆண்டுகள் வரை இங்கே எந்த முபல்லிஃக்கும் வரவில்லை. இதனால், நான் மிகவும் கவலையாக இருந்தேன். ஹாஃபிஸ் சாஹிப் சொன்னார்கள்: 'நீங்கள் காலத்தின் கலீஃபா அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொண்டே இருங்கள். அப்போது ஏதாவது ஒரு ஏற்பாடு ஆகி விடும்.

இவர்கள் கூறுகிறார்கள்: எவ்வாறாயினும், 2004 ஆம் ஆண்டில், மார்கஸிலிருந்து எனக்கு இப்படி ஒரு வழிகாட்டுதல் வந்தது: 'ஒரு அந்நிய நபர் வருகிறார். அவரை நீங்கள் விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லுங்கள். 'நான் அங்கு விமான நிலையத்திற்குச் சென்றேன். சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒருவர் புன்சிரித்தவாறு வெளியே வந்தார், என் பெயரைக் கேட்டார். நான் 'சாம்' என்று சொன்னேன். அதற்கு அவர், 'என் பெயர் கௌஸர்' என்று கூறினார். அவர் இன்ஆமுல் ஹக் கௌஸர் சாஹிப் ஆவார். இவர்கள் கூறுகிறார்கள்: அன்றிலிருந்து நாங்கள் இருவரும் சகோதரர்களைப் போல் ஆகிவிட்டோம். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து, கோஸ்ராய் மற்றும் போம்ப்பேயிக்கு பயணம் செய்தோம். அங்கே ஒரு வாரம் தங்கியிருந்தோம். நாங்கள் பிரிந்தபோது, நாங்கள் ஒருவரை ஒருவர் மிக நீண்ட காலமாக அறிந்திருந்ததைப் போன்றே எங்கள் உறவுகள் இருந்தன. இது இஸ்லாமியச் சகோதரத்துவம் ஆகும். இவர்கள் கூறுகிறார்கள்: 'அல்லாஹ்வின் அருளால், முஸ்லிமான பிறகு, என் உள்ளத்திற்கு நிம்மதியும், ஆன்மாவிற்கு அமைதியும் கிடைத்தது. தொழுகை என்னை மாற்றி விட்டது. என் மனைவியும் என்னுள் இந்த மாற்றத்தை உணர்ந்தார். அதன் பிறகு, எனக்கு எப்போதெல்லாம் ஏதாவது தேவைப்பட்டால், நான் அல்லாஹ்விடம் கேட்பேன். அல்லாஹ் உடனடியாக அதை நிறைவேற்றி விடுவான். இந்த உதவியை நான் பலமுறை என் கண்களால் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு துஆவிலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியிருக்கிறேன்.

இவர்களின் பேத்தி ஜூலியா கூறுகிறார்:

'இவர்கள் மிகுந்த கலப்பற்ற முஸ்லிமாக இருந்தார்கள். இவர்கள் தமது ஈமானிலிருந்து ஆறுதலையும், ஆற்றலையும் பெறுவார்கள். பெரும்பாலான நேரத்தை இறை வணக்கத்தில் கழிப்பார்கள். திருக்குர்ஆனை ஓதுவதை மிகவும் விருப்பமானதாகக் கொண்டிருந்தார்கள். பல்வேறு இஸ்லாமிய நூல்களை படித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இவர்களைப் பெரும்பாலும் ஆழ்ந்த சிந்தனையிலும், கவலையிலும் மூழ்கியிருக்கக்க கண்டிருக்கிறோம். அல்லாஹ் இவர்களுக்கு பாவமன்னிப்பை வழங்கி இவர்கள் மீது கருணை காட்டுவானாக! இவர்களின் குடும்பத்தில் உள்ள சிலர் அஹ்மதிகள் அல்ல. இவர்களின் வழித்தோன்றல்களில், அவர்களும் அஹ்மதிகளாக ஆக அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி அத்தாவுல் முஃக்னீ

** * * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி....**
**(குத்பா பேருரை 24.10.25)**

இருந்தது. அதாவது எவர் வலிமை படைத்தவராகவும், பயணத்தின் கடினத்தை சகித்துக் கொள்ளக் கூடியவராகவும் இருப்பாரோ, மேலும் எவருக்கு சவாரியும், வழிப்பாதை உணவும் கிடைக்குமோ அவரே நம்முடன் செல்வார் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலும் இருந்தது.

அந்த சந்தர்ப்பத்தின் போது, சில ஸஹாபிகள் அழுதுகொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சவாரி கொடுக்குமாறு விண்ணப்பித்தார்கள். மேலும் அவர்கள் அதற்கு தேவையுடையவர்களாக இருந்தார்கள்.

இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னிடமோ உங்களுக்கு வாகனம் கொடுத்து அனுப்பும் அளவிற்கு எதுவும் இல்லை. அப்போது அழுது கொண்டு அவர்கள் திரும்பி சென்று விட்டார்கள். இந்த ஸஹாபிகளின் தூய்மை, நன்றியுணர்வு மற்றும் இயலாமையின் அந்தத் தன்மையை அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளான். **(தொடரும்....)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * *

1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)

கூறட்டும்! உண்மையாளருக்கு அல்லாஹ் சுயமே உதவியாளனாகவும், பாதுகாவலனாகவும் இருக்கின்றான். உண்மையாளருக்கு அவன் தண்டனை அளிப்பானா? அப்படியென்றால், பின்னர் உலகில் எந்த நபரும் உண்மையை பேசுவதற்கு துணிய மாட்டார். மேலும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையே அகன்று விடும். மேலும், உண்மையாளர் உயிருடனே மரணித்து விடுவார்.

அசல் விஷயம் இதுவாகும். அதாவது உண்மை பேசுவதால் எவர் தண்டனை பெறுவாரோ அவர் நிச்சயமாக உண்மையின் காரணமாக பெறுவதில்லை. மாறாக வேறு சில மறைவிலும் மறைவான தீய செயலுக்கான தண்டனையாக அது அமைகின்றது. மேலும் வேறொரு பொய்க்கான தண்டனையாக அமைகின்றது. அல்லாஹ்விடத்தில் அவர்களின் தீமைகள் மற்றும் தீங்குகளுக்கான ஒரு தொடர் இருக்கின்றது. அவர்களின் ஏராளமான குற்றங்கள் இருக்கின்றன. மேலும் அதில் ஏதாவது ஒன்றிற்காக அவர்கள் தண்டனை பெறுகிறார்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 10 பக்கம் 17 மே 17

** * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி....**
**(தஃப்ஸீரே கபீர்)**

மனித இயல்பிற்கு எதிரானதாகும். காது எதனை கேட்டதோ அது தொடர்பாக நான் கேட்கவில்லை என்று கூறுவதே பொய்யாகும். மேலும் கண்கள் எதனை பார்த்தனவோ அது தொடர்பாக நான் அதனை கேட்கவில்லை என்று கூறுவது பொய்யாகும். கை ஒரு பொருளை எடுத்தது; ஆனால் எனது கைகள் எந்தப் பொருளையும் எடுக்கவில்லை என்று மனிதன் கூறி விடுவது பொய்யாகும். ஒரு நபரின் கால்கள் ஒரு பக்கம் செல்கின்றன. ஆனால் அவரோ எனது கால் அந்தப் பக்கம் செல்லவில்லை என்று கூறி விடுகின்றார். இது பொய்யாகும். மனிதன் அந்நியர்களுடைய செயல்களை அல்ல; மாறாக தனது செயல்களை மறுப்பதுன் பெயரே பொய்யாகும் இதைவிட இயல்பிற்கு எதிரான விஷயம் வேறு என்ன இருக்க முடியும்? யூகம் இடம் பெறும் விஷயத்தில் தான் ஐயம் கொள்ள முடியும். ஐம்புலன்களின் செயல்பாடுகளில் ஐயம் கொள்ள முடியாது. இந்த ஐம்புலன்களின் செயல்பாடுகளுக்கு எதிரான கூற்றையே பொய் என்று கூறுகின்றோம்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4,
பக்கம் 580 - 583)

** * * * * *

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை**

நயவஞ்சகர்கள் மக்களை தபூக் போரில் இறை தூதர் (ஸல்) அவர்களுடன் செல்வதிலிருந்து தடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவலும் கிடைத்தது

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சில நபர்களுடன் அதன் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும் ஸுவைலிமுடைய வீட்டிற்கு நெருப்பு வைத்து விடுங்கள்! அதாவது அதனை அழித்து விடுங்கள்; இடித்து விடுங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அந்த காலத்தில் அது மண் வீடாகவே இருந்து வந்தது. மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அதனை செயல்படுத்தினார்கள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரில் மிகப் பெரிய கொடியை ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள்

இது மட்டுமின்றி, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி) ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அல்லது வேறு சில அறிவிப்புகளின்படி ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களுக்கும் கொடி வழங்கப்பட்டது

மதிப்பிற்குரிய முரப்பி குலாம் முஹய்யிதீன் ஸுலைமான் ஸாஹிப் மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஷஃபீக் ஸுஹ்கல் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய புஷ்ரா பர்வேஸ் மின்ஹாஸ் ஸாஹிபா ஆகியோரின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றும் நான் தபூக் போரின் சம்பவங்களை கூடுதல் விளக்கங்களை எடுத்துரைப்பேன். கைஸ் என்ற ஒரு நபருடைய சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இவரும் நயவஞ்சகர்களை சார்ந்த ஒரு மனிதராக இருந்தார். இவர் அப்துல்லாஹ் பின் உபைக்குப் பிறகு நயவஞ்சகர்களின் மற்றொரு பெரிய தலைவனாக இருந்தார். அப்துல்லாஹ் பின் உபையுடன் இணைந்து இவர் பல்வேறு சதித்திட்டங்களில் மும்மரமாக ஈடுபட்டிருந்தார். ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின் போதும் பைஅத் செய்யாமல் இருந்த நபரும் இவரே ஆவார். இவரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி போரில் பங்கு பெறாமல் இருப்பதற்கான போலியான காரணங்களை முன்வைத்தார். ஆனால் இந்த போலியான காரணங்களும் கூட ஒரு வினோதமான மற்றும் அறிவீனமான வகையில் வகையாக இருந்தது.

ஆக எழுதப்பட்டுள்ளது; சந்தர்ப்பத்தின்போது, பனு சலீமஃ கோத்திரத்தின் தலைவனாக இருந்த ஜத்த பின் கைஸிடம், ஜத்தே! நீர் இந்த வருடம் பனூ அஸ்ஃபர் அதாவது ரோமானியர்களுடனான ஜிஹாதில் செல்கின்றீரா? என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு விலக்கு அளியுங்கள்; மேலும் என்னை சோதனைக்கு ஆளாக்காதீர்கள்; இறைவன் மீது ஆணையாக! எனது சமுதாயம் என்னை குறித்து நன்றாக அறிந்து இருக்கின்றது. அதாவது என்னை விட அதிகமாக பெண்களை விரும்பக் கூடியவர் வேறு எவரும் இல்லை. எனக்கு அச்சமாக உள்ளது; ஒருவேளை நான் பனூஅஸ்ஃபரில் அதாவது ரோமானியர்களின் பெண்களை பார்த்து விட்டால் என்னால் பொறுமை செய்ய முடியாது. இந்த அறிவீனமான பதிலைக் கேட்டு அவனிடமிருந்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முகந்திருப்பி கொண்டார்கள். மேலும் சரி! நீ செல்ல வேண்டாம்; உனக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்று கூறினார்கள். நீர் செல்வதற்கு எந்த அவசியமில்லை என்றும் கூறினார்கள். அவரது மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜத் (ரலி) அவர்கள் பத்ர்போர் ஸஹாபியாக இருந்தார்கள்; மிகவும் களங்கமற்ற நபராகவும், தூய மனிதராகவும் இருந்தார்கள். தமது தந்தையிடம் வந்தார்கள். மேலும் அவரிடம் கூறினார்கள்: நீர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அழைப்பை ஏன் நிராகரித்தீர்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! பனூ சலீமஃ கோத்திரத்தில் உம்மைவிட அதிகம் செல்வந்தர் வேறு எவரும் இல்லை; நீரும் புறப்படுவதில்லை; வேறு எவரும் செல்வதற்கு சவாரியும் கொடுப்பதில்லை;

அதாவது எந்த போராளிக்கும் சவாரிகள் போன்ற எந்த ஏற்பாடும் செய்து கொடுப்பதுமில்லை. அதற்கு அவர் கூறினார்: எனது மகனே! நான் வெப்பத்திலும், கஷ்டத்தின் காலத்திலும் பனூ அஸ்ஃபரியை நோக்கி புறப்படுவதற்கு எனக்கு என்ன (க்கேடு) நேர்ந்து விட்டது? எனது மகனே! நான் எனது வீட்டிலும், எனது பகுதியிலும் இருந்து கொண்டே ரோமானியர்களின் அச்சத்தால் நடுங்குகின்றேன்.

தனது மகனுக்கு இந்த பதிலை கொடுத்தான்.

அவ்வாறிருக்க, அப்படிப்பட்ட மக்களுடன் போரிடுவதற்காக நான் அவர்களின் பகுதிகளுக்கு எப்படி செல்ல முடியும்? நானோ வீட்டிலேயே அச்சமடைந்திருக்கின்றேனே!

எனது மகனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் மிகவும் புத்திசாலியும், அனுபவம் படைத்தவனும் ஆவேன்; எனக்கு போர்களைக் குறித்து மிகுந்த அறிவு இருக்கின்றது. வல்லரசான ரோமானிய பேரரசுடன் போர் புரிவது ஒன்றும் அறிவுடைமை கிடையாது என்று அவர் கூறிக் கொண்டிருந்தார்.

இந்த அனைத்து விஷயங்களையும் கேட்டுவிட்டு அவரது தூய மகன் கோபம் கொண்டார்கள். மேலும் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது நயவஞ்சகமாகும். அதன் காரணமாக நீர் போருக்கு செல்லாமல் இருக்கின்றீர். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! உம்மை குறித்து அல்லாஹ்வின் தூதருக்கு நிச்சயமாக திருக்குர்ஆன் வசனம் இறங்கும்!

அன்னாருடைய தந்தை தனது காலணியை எடுத்து அன்னாரது முகத்தில் அடித்து விட்டார். அவரது மகன் திரும்பி சென்று விட்டார். மேலும் அவரிடம் எதுவும் பேசவில்லை.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 27 NOV 2025 Issue No. 48

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஜத் பின் கைஸ் தொடர்பாக இந்த வசனம் இறங்கியது.

وَمِنْهُمْ مَّنْ يَّقُوْلُ ائْذَنْ لِّيْ وَلَا تَفْتِنِّيْ

பொருள்: அவர்களைச் சார்ந்த (நயவஞ்சர்களான) சிலர் (பின்தங்கி விட) எனக்கு நீர் அனுமதி வழங்குவீராக; என்னை (ப்போருக்கு செல்ல வைத்துச்) சோதனைக்கு ஆளாக்கி விடாதிருப்பீராக என்று கூறுகின்றனர் ( அத்தவ்பா: 49)

பிற்காலத்தில் அவர் தவ்பா செய்துவிட்டிருந்தார். மேலும் நல்ல முறையில் தவ்பா செய்திருந்தார். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் மரணம் அடைந்தார் என்று கூறப்படுகின்றது. ( அஸ்ஸீரத்துன் நபவிய்யா, பக்கம் 815 2001 ஆம் ஆண்டு)

பிற்காலத்தில் அவரிடம் இந்த நயவஞ்சகம் இருக்கவில்லை. மாறாக உறுதியான முஸ்லிமாகியிருந்தார்.

மேலும் சதித் திட்டம் தீட்டக் கூடிய மக்கள் அனைவரும் அங்கு ஓரிடத்தில் ஒன்று கூடி அந்தப் போர் தொடர்பாக சதி திட்டங்களையும் தீட்டிக் கொண்டிருந்தனர். அதன் சிறிய விளக்கம் முன்னரும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் தங்களுக்கென ஒரு தலைமையகத்தை உருவாக்கியிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தலைமையகத்தை அழிப்பதற்கு கட்டளை வழங்கினார்கள். அதன் விளக்கம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது மதீனாவில் நயவஞ்சகர்கள் மற்றும் யூதர்கள் இந்த சதித் திட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அதாவது பொய்யான வதந்திகளை பரப்பி முஸ்லிம்களின் தைரியத்தை சீர்குலைக்கின்ற முயற்சியும் செய்து வந்தனர். மேலும் முஸ்லிம்களை போரில் செல்வதிலிருந்து தடுப்பதற்கு முழுமையான முயற்சியும் செய்தனர். மேலும் அதற்காக அவர்கள் பல வகையான வழிமுறைகளை பயன்படுத்தி வந்தனர். தூய மற்றும் உறுதியான நம்பிக்கை கொண்ட முஃமின்கள் நயவஞ்சகர்களின் இந்த கீழ்த்தரமான செயல்களை நன்கு அறிந்திருந்தனர் என்பது மட்டுமின்றி அவர்களை கண்காணித்தும் வந்தனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ( ஸல்) அவர்களின் சமூகத்தில் அந்த மக்களை குறித்த புகார்களும் கிடைத்துக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கருணை மற்றும் பரிவின் காரணமாக அந்த மக்களை மன்னித்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் அமைப்பிற்கு எதிராக ஓர் அபாயகரமான சூழ்ச்சியை அவர்கள் செய்தபோது, அதனை மிகவும் நுட்பமான ஞானத்துடன் ஆனால் அதே நேரம் கடுமையுடன் அதனை அழிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தார்கள். இந்த அடிப்படை வழிமுறையை நினைவில் கொள்ள வேண்டும்!

அதாவது அமைப்பிற்கு எதிராக ஏதாவது விஷயம் இருந்தால் பின்னர் கடுமையும் காட்டப்படுகிறது. அங்கு பின்னர் மென்மைக்கான கேள்வி எழுவதில்லை.

ஆக, இதே போன்ற ஒரு நடவடிக்கை அந்த சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டது. ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தது. அதாவது ஜாஸூமிற்கு அருகில் உள்ள ஸூவைலிம் யூதனின் வீட்டில் நயவஞ்சகர்கள் ஒன்றுகூடி கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது.

ஜாஸூம் மதீனாவிலுள்ள ஒரு கிணறாக இருந்தது. இதனை பிஃரே ஜாஸூம் என்றும் கூறுகின்றார்கள். இந்த நயவஞ்சகர்கள் மக்களை தபூக் போரில் இறை தூதர் (ஸல்) அவர்களுடன் செல்வதிலிருந்து தடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவலும் கிடைத்தது. உண்மையில் இந்தப் போருக்கு செல்வதிலிருந்து முஸ்லிம்களை தடுப்பதற்காக மதீனாவில் செய்யப்பட்டு வந்த எல்லா வகையான பொய் பிரச்சாரங்களுக்கான அனைத்து சதித் திட்டங்களையும் அவர்கள் இங்கு தயார் செய்து கொண்டிருந்தனர்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சில நபர்களுடன் அதன் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும் ஸூவைலிமுடைய வீட்டிற்கு நெருப்பு வைத்து விடுங்கள்! அதாவது அதனை அழித்து விடுங்கள்; இடித்து விடுங்கள் என்று கட்டளை வழங்கினார்கள். அந்த காலத்தில் அது மண் வீடாகவே இருந்து வந்தது. மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அவ்வாறே செய்தார்கள். அதனால் அந்த இடத்தில் இருந்த அனைத்து நபர்களும் தப்பி ஓடிவிட்டனர். அவ்வாறு தப்பி ஓடியவர்களில் ஒருவனாக ஸஹ்ஹாக் பின் ஹலீஃபஃ என்பவனும் இருந்தான். அவன் நயவஞ்சகர்களுடன் சேர்ந்து கொண்டிருந்தான். அவர் வீட்டின் மேற்கூரை மீது ஏறிவிட்டான். மேலும் அவன் பின்புறத்தில் இருந்து அவன் கீழே குதித்து விட்டான். அதன் காரணமாக அவனது காலும், கையும் உடைந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையும், அன்னாரின் மன்னிப்பும் அவர் மீது எவ்வாறு மேலோங்கியது என்றால் அன்னார் (ஸல்), அவர்களில் எவரையும் கைது செய்வதற்கு கட்டளை வழங்கவில்லை. மேலும் அத்துடன் மேல் கூடுதல் வேறு எந்தத் தண்டனையும் வழங்கவில்லை. ஆயினும் சதித் திட்டங்களுக்கான அந்த அலுவலகம் அதாவது தலைமையகம் தரைமட்டமாக்கப்பட்டது. (ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துனியா, தொகுதி 4 பக்கம் 72 தாருல் மியா 1996 ஆம் ஆண்டு)

தபூக் போர் பயணத்திற்கு செல்வதற்காக ஒவ்வொருவரும் ஆயத்தங்களில் மும்மரமாக இருந்தனர். பயணத்திற்கான செலவுக்கான ஏற்பாடு ஆகிவிட வேண்டும் என்பதற்காக பொருள் தியாகங்களுக்கான தொடரும் தொடர்ந்து கொண்டிருந்தது. வறிய மற்றும் ஏழை ஸஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகியபோது, போருக்கான ஆயத்தங்கள் செய்வதில் அவர்களுக்கு உதவி செய்யப்பட்டது. இவ்வாறு எவர்களிடம் சவாரி போன்றவை இல்லாமல் இருந்ததோ அந்த ஸஹாபிகளுக்கு செல்வம் படைத்த மக்கள் சவாரிகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளை செய்து கொடுத்து வந்தார்கள். ஏனெனில் சவாரியின்றி இந்த பயணம் சாத்தியமற்றதாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டுதலும்

இதன் தொடர்ச்சி.... 10-ம் பக்கம்..

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad